
தர்ம சக்கரம்



குரோதன ஸூ ஆனி மீ சக்கரம் 34 ஆரம் 6

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ஹு ஆனி மீ	ஆரம் 6

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 45-00
தனி இதழ்	,,	ரூ. 1-50	,,	ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—அன்னூரில் 16—6—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலே 10-00 மணிமுதல் மாலே 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு மாவட்டம்—வேலூரில் 16—6—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலே 10-00 மணிமுதல் மாலே 4-30 மணிவரை..
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்
உணவு வசதி: மதிய உணவு வேண்டுவோர் ஆச்ரமத்தில் ரூ. 2-00 செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்ளவும்.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை மாவட்டம்—கம்பத்தில் 23—6—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ முத்தையா பிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

உணவு வசதி: பகல் உணவு வேண்டுவோர் ரூ. 1-50 செலுத்தி டிக்கட் பெற்றுக் கொள்ளவும்.

மதுரை ஜில்லா—வடக்கம்பட்டியில் 23—6—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அன்பர் மனோஹரன் இல்லம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருச்சி ஜில்லா—ஸ்ரீரங்கத்தில் 23—6—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேஷன் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள தோப்பில் இருக்கும் ஸ்ரீ அன்ன காமாக்ஷி அம்மன் கோவில்

நேரம்: மாலை 6-00 மணிமுதல் இரவு 8-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

காமராஜர் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 23—6—85 ஞாயிறு

இடம்: ஸ்ரீ ராமலிங்க சௌடாம்பிகை அம்மன் தேவஸ்தான மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

வடஆற்காடு ஜில்லா—மேக்களூரில் 29—6—85 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ நவநீத கோபாலகிருஷ்ண ஆலயம்

நேரம்: காலை 9-00 மணிமுதல் 11-00 மணிவரை மாலை 1-00 மணிமுதல் 3-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ் சாலையில் 30—6—85 ஞாயிறு

இடம்: D.A.V. ஹையர்செகண்டரி பள்ளியில் (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)

நேரம்: காலை 10-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பாண்டிச்சேரியில் 7—7—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சொசியெத்தே ப்ரோக்ரேஸிஸ்த் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—ஆவணிப்பூரில் 8—7—85 திங்கட்கிழமை

இடம்: அரசினர் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 || குரோதன ஹூ ஆனி மீ || ஆரம் 6

பிரார்த்தனை

यावद्वित्तोपार्जनशक्तस्तावन्निजपरिवारो रक्तः ।
पश्चाद्धावति जर्जरदेहे वार्तां पृच्छति कोऽपि न गेहे भज गोविन्दं ॥ — शंकराचार्य

யாவத்வித்தோபார்ஜன சக்தஸ்தாவந்நிஜ பரிவாரோ ரக்த: ।
பஸ்ச்சாத் த்வாவதி ஜர்ஜரதேஹே வார்த்தாம் ப்ருச்சதி கோஅபி ந கேஹே
[பஜகோவிந்தம் ॥
— ஆதிசங்கரர்

ஒருவன் உழைத்துச் சம்பாதிக்கும் வரையில் அவனுடைய உறவினர்கள் அவனிடம் பற்றுடையவர்களாக இருப்பார்கள். சம்பாத்தியம் நின்று போய் முதுமையடைந்து அவன் தளர்வுறுங்காலத்தில் அவனுடைய வீட்டாரும் அவன் நலத்தைப்பற்றி விசாரிக்கமாட்டார்கள். ஆகவே கோவிந்தா! உம்மை வழிபடுகின்றேன்.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்;
என்னை நாடிய என் உயிர் நாதனே!
உன்னை நாடுவன்; உன் அருள் தூவெளி
தன்னை நாடுவன்; தன்னம் தனியனே!

— தாயுமானவர்

அருள் விருந்து

மனத்தூய்மைக்குப் புறம்பான சமயம் ஏதும் இல்லை.

பிறரை நேசிக்குமளவு ஒருவன் அன்பில் மேலோங்குகிறான்.

மனிதன் எங்குச் சென்றாலும் மரணத்தைத் தவிர்க்கமுடியாது.

மனிதனுக்குத் தீங்கு செய்பவைகளுள் தலையாயது சுயநலப்பற்றும்.

சாஸ்திரங்கள் சத்தியத்திற்கும், தர்மத்திற்கும் விளக்கங்களாகின்றன.

பண்பு பிறப்பை ஒட்டியதன்று; பயிற்சியினின்று அது வடிவெடுக்கின்றது.

மனிதன் தன்னைத் தூய்மைப்படுத்துதற்கேற்ப இறைவனுக்குற்ற கருவியாகிறான்.

சமுதாயத்தில் தென்படும் கேடுகளை அகற்ற முயலாதவன் வீணில் பிறந்தவனாகிறான்.

ஆத்ம சாதனங்கள் புரியாது வீண்பொழுது போக்குகிறவன் வாழ்நாளை வீணாக்குகிறான்.

தாகத்தில் பரிதவிக்கும் பாமரன் ஒருவனுக்கு வழங்கும் நீர் இறைவனுக்கு வழங்கியதாகிறது.

இறைவனுடைய திட்டம் நிறைவேறுக. யாண்டும் மனிதன் சுயநலத் திட்டத்தை ஒதுக்கிவைத்துப் பழகுவானாக.

மனம் அடங்கியிருப்பவனை உலகம் போற்றுகிறது. அவன் புரிகிற மன வடக்கம் யாருக்கும் துன்பம் விளைவிப்பதில்லை.

தீண்டாமைக்குப் பிரமாணம் சமயத்தில் இல்லை. அது மனிதன் தனக்குத் தானே கற்பித்துக்கொண்ட செருக்கின் விளைவாம்.

பொருளற்ற பழக்க வழக்கங்களை உதறித்தள்ளாது பொழுது போக்குகிறவன் சோம்பேறி; சமுதாயத்துக்கு அவன் வெறும் தலைச் சுமையாகிறான்.

கூண்டினின்று கிளியை வெளியே போகவிட்டால் அதைப் பூனை பிடிக்கும். அதே பாங்கில் மனதை வெளியே போகவிட்டால் புலன்களுக்கு அது வசப்படும்.

எங்கும் நிறைபொருளாகிய கடவுளைத் தன் சமயத்தில் தான் இருப்பவராக எண்ணித் தான் கட்டியுள்ள கோயிலில் அவரை அடைத்து வைக்க மானுடன் துணிகிறான் என்னே!

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பூரியிலே ஜகந்நாதர் ஆலயத்திலே ஆண்டு தோறும் தேர்த்திருவிழாச் சிறப்பாக நடை பெறுவது உண்டு. அதே முறையில் அக் காலத்தில் கல்கத்தாவிலே பலராம்போசு தம் மாளிகையிலே பக்தர்கள் சிலரை வரவழைத்து வைத்துக்கொண்டு அவ்விழாவைக் கொண் டாடினர். 1885 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவ்விழாவை வழக்கம்போன்று அவர் நடாத் தினர். அதில் கலந்துகொள்ளும்படி பரம ஹம்சதேவரும் அழைக்கப்பெற்றிருந்தார்.

பரமஹம்சதேவரும் மகேந்திரரும் உரை யாடிக் கொண்டிருந்தனர். அக்கூட்டத்தினுள் நாராயணன், தேஜ்சந்திரன், பலராம் மற்றும் பக்தர்கள் குழுமியிருந்தனர். அவ்விருவருக்கு மிடையில் நிகழ்ந்த பேச்சு பூரணனைப் பற்றிய தாம். அவ்விளைஞன் நல்லியல்பே வடிவெடுத் தவன். அவனுக்குச்சுமார் வயது பதினைந்துஆகி இருந்தது. பரமஹம்சதேவர் அவனிடம் தெய் வீகப் பேரன்பைக் காட்டி வந்தார்.

பரமஹம்சதேவர் (மகேந்திரரைப் பார்த்து): "எவ்வழியில் பூரணன் இங்குவந்து சேருவான் என்பதைப்பற்றிக் கவனித்து வா. அவன் வந்த வுடன் துவிஜனோடு அவன் உரையாடுவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தைச் செய்து வைப்பாயாக.

"இருவர் வயதில் ஒன்றுபட்டவர்களாகவும் இயல்பிலே ஒருவனோடு ஒருவன் சம்பந்தப் பட்டவனாகவும் தென்படுகிறவிடத்து அவ்விரு வருக்கிடையில் இணக்கத்தை உண்டுபண்ணி அந்த இணக்கம் மேலும் மேலும் வளரும்படி செய்வதைச் சீரிய கடமையாக நான் கொண் டிருக்கிறேன். அதில் ஆழ்ந்த கருத்தொன்று புதைந்து இருக்கிறது. இப்படிச் செய்வதால் இருவரும் முன்னேற்றம் அடைகின்றனர். பூரணன் ஒரு சிறந்த பக்தன். அவனுடைய நடை உடைபாவனைகளை நீ கவனித்துப் பார்ப் பாயாக."

மகேந்திரர்: "ஆம் ஐயனே! தாங்கள் பகரு வது முற்றிலும் மெய். ஒரு நாள் நான் டிராம் காரில் வீதியில் போய்க்கொண்டிருந்தேன். தன் வீட்டு மாடியில் நின்றுகொண்டிருந்த பூர ணன் விரைந்து கீழே ஓடி வந்து வீதியில் நின்றுகொண்டு அன்புடன் என்னை நமஸ்கரித் தான்."

இதைக் கேட்ட பரமஹம்சர் ஆனந்த பர வசம் அடைந்தார். அவர் கண்களினின்று இரண்டு துளி கண்ணீர் அரும்பெடுத்தது. "ஆ! ஆ! நீ அவனுக்குச் செய்துள்ள உதவி ஒப் புயர்வற்றது. இதன் வாயிலாக அவன் வாழ்க் கையின் மேலாம் நோக்கத்தை நிறைவேற்று வது திண்ணம். அருள்தாகம் படைத்துள்ள ஒருவனுக்குத்தான் ஈசுவரக் கிருபையினால் இத்தகைய உதவி வாய்க்கிறது.

"நரேந்திரன், இளைய நரேந்திரன், பூரணன் ஆகிய மூவரும் ஆண்மை படைத்தவர்கள். மற்று இதற்கு நேர்மாறாகப் பவநாதனிடம் பெண்மையே முன்னணியில் வந்து நிற்கிறது.

"பூரணன் மனபரிபாகத்தில் மிகவும் மேலோங்கி நிற்கின்றான். ஒரு வேளை அதன் விளைவாக அவன் சரீரத்தையே ஒதுக்கித் தள் ளக்கூடும். ஏனென்றால் ஆத்மானுபூதிக்குப் பிறகு பஞ்சபூதங்களாலாகிய சரீரத்தில் பயன் ஏதுமில்லை.

"அவன் தெய்வீக இயல்பு மிகப் படைத்த வன். ஆதலால் இவ்வுலக வாழ்க்கைக்கும் அவனுக்கும் வெகுதூரம். அத்தகைய பாங் குடையவன் எக்காரணத்தை முன்னிட்டும் மக்க ளுக்கு அஞ்சமாட்டான். அவன் கழுத்திலே பூமாலை ஒன்று போட்டால் அல்லது அவன் மேனியின் மீது சந்தனம் பூசினால் அல்லது அவன் முன்னிலையில் ஊதுபத்தி ஒன்றைக் கொளுத்தி வைத்தால் அக்கணமே அவனு டைய மனது இப்பிரபஞ்சத்திற்கு அப்பா லுள்ள பாரமார்த்திகப் பெருநிலைக்குப் பறந் தோடும். அந்நிலையை எட்டியான பிறகு தன் சரீரத்தினுள் குடியிருப்பது எந்த ஜீவனு மல்லன்; சாட்சாத் நாராயணன் தானே அவ் வுடலில் எழுந்தருளியிருக்கிறான் என்னும் உண்மையை அவன் அறிய வருவான். இது தான் அவனைப்பற்றிய உண்மை.

"தக்ஷிணேசுவர ஆலயத்தில் ஆத்ம சாதனத்

தில் நான் தீவிரமாக ஈடுபட்டேன். அதன் விளைவாக இப்பிரபஞ்சத்திற்கு அப்பாலுள்ள பரமானந்தப் பெருநிலையை நான் ஆழ்ந்து அனுபவிக்கலாயினேன். அக்காலத்தில் பிராமண குலத்தைச் சேர்ந்த மாது ஒருத்தி தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வந்தாள். ஆலயத்திலே அன்னை பவதாரிணிக்குச் சாத்திய பூமாலை ஒன்றை அவள் கழுத்தில் போட்டார்கள். அங்கு அப்பொழுது ஊது பத்தி தூபம் கமழ்ந்துகொண்டிருந்தது. இந்த இரண்டு சூழ்நிலைகளும் ஒன்று சேர்ந்து அம்மாதரசியை அதீத நிலைக்குக் கொண்டு போயின. அவள் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தாள். கண்களினின்று ஆனந்த பாஷ்பம் தாரை தாரையாக ஊற்றெடுத்து வந்தது. பக்தி பூர்வமாக அவள் பாதத்தைத் தொட்டு நான் வணங்கினேன். “தாயே! நான் கடைத்தேறுவேனா?” என்று அவளிடம் நான் விண்ணப்பித்தேன். “குழந்தாய் அதில் சந்தேகம் ஏதுமில்லை. நீ அன்னையின் அருளுக்குப் பாத்திரமாவாய்” என்று அவள் இயம்பி என்னை ஆசீர்வதித்தாள்.

“பூரணனை மீண்டும் ஒருமுறை பார்க்க நான் விரும்புகிறேன். ஆனால் அது சாத்தியப்படுமா? அவன் தெய்வீக அம்சம் வாய்க்கப்பெற்றவன். இது வியப்புக்குரிய விஷயமாம். தெய்வீகக் கூறு அந்த இளைஞனிடம் தவழ்ந்துகொண்டிருந்தது. அவ்விளைஞன் ஒரு நுண்ணறிவாளன். பள்ளிப் படிப்பிலும் அவன் நிபுணன் என்பது தேற்றம். இதுவே அவனைப் பற்றிய உண்மையாம்.

“தீவிரமாகத் தவம்புரிந்து தெய்வீக இயல்பு படைத்த மகன் ஒருவனை ஒருவன் பெற்றெடுக்கலாம். கமார்புகூர் செல்லும் பாதையிலே ரஞ்சித்ராயருடைய தடாகம் என்னும் பெயர் தாங்கியுள்ள நீர்நிலை ஒன்று உளது. அவர் பகவதியை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அதன் விளைவாக அம்பிகையின் மகிமைகள் சில அமைந்துள்ள பெண்ணொருத்தி அவருக்கு மகவாகப் பிறக்கலாயினள் ஆதலால் அச்சிறுமியைப் பாராட்டும் பாங்கில் அக்காலத்தில் ஆண்டுக்கு ஒரு தடவை சித்திரை மாதத்திலே விழா எடுக்கப்பட்டு வந்தது. அந்நிகழ்ச்சி இன்றைக்கும் ஒருவாறு நிறைவேறி வருகின்றது. நானும் ஒரு தடவை சென்று அவ்விழாவில் கலந்து கொள்ள விரும்புகிறேன்.

“அப்பக்கங்களில் இருந்த பூஸ்திதிக்கு ரஞ்சித்ராயர் சொந்தக்காரராயிருந்தார். அன்னவர் புரிந்த தவத்தின் விளைவாகவே அன்னை பராசக்தியின் மகிமைகள் சிலவற்றோடு கூடியவளாக அக்குழந்தை பிறந்தாள். தந்தை தன் மகளிடம் பேரன்பு பூண்டிருந்தார். அச்சிறுமியும் தன் தந்தையை உள்ளன்போடு நேசித்து வந்தாள். எப்பொழுதும் அவள் தன் தந்தையின் முன்னிலையிலேயே வாழ்ந்து வந்தாள். அவரை விட்டுப் பிரிய அவள் ஒரு பொழுதும் ஒருப்படமாட்டாள். ஒரு நாள் ரஞ்சித்ராயர் தம்முடைய பூஸ்திதி சம்பந்தமான அலுவல்கள் பலவற்றில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். ஆனால் அவருடைய அன்புக்கு இலக்காகியிருந்த செல்வி அவரை இது என்ன, அது என்ன என்று கேட்டு உபத்திரவப்படுத்தினள் “குழந்தாய் நான் கவனிக்க வேண்டிய அலுவல்கள் பல உள. ஆகையினால் நீ என்னை உபத்திரவப்படுத்த வேண்டாம்” என்று இனிய சொற்களால் அவளைச் சமாதானப் படுத்தினர். ஆனால் அக்குழந்தையோ அந்த இடத்தை விட்டு அசையவில்லை. தன் போக்கில் அவள் தந்தையை உபத்திரவப்படுத்திக் கொண்டே இருந்தாள். தாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அலுவல்கள் பல இருந்ததால் தந்தையும் ஒருவாறு சினந்து கொண்டவர் போன்று பாசாங்கு பண்ணினர். “மகளே! இங்கு நிற்க வேண்டாம். வீட்டுக்கு ஓடிப்போ” என்னும் கடும் சொல்லைக் கையாள அத்தருணத்தில் அவர் கடமைப்பட்டிருந்தார். தந்தையிடமிருந்து வந்த ஆணைக்கு அடிபணிந்தவள் போல் அவள் நடந்து கொண்டாள். உடனே அந்த இடத்தினின்று புறப்பட்டு அவள் வெளியே சென்றாள். பாதையிலே சங்கினால் செய்யப்பட்ட வஸ்துக்கள் பலவற்றை வியாபாரம் செய்யும் மனிதன் ஒருவன் அவள் கண்ணுக்குத் தென்பட்டான். அவனிடமிருந்து அவள் சங்கு வளையல் இரண்டை வாங்கிக்கொண்டாள். அவைகளுக்குரிய விலையைத் தரும்படி அந்த வர்த்தகன் அச்சிறுமியிடம் கேட்டான். அதற்கு அவள் “நான் வசித்து வரும் வீட்டிலே பெட்டி ஒன்றிலே பணம் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆங்குச் சென்று கேட்பா

யாகில் இந்த வளையல்களின் விலையை அவர்கள் உனக்கு எடுத்துச் செலுத்து வார்கள்" என்று இயம்பினாள். வர்த்தகனும் அங்ஙனமே செய்தான். அக்குழந்தையை இங்கும் அங்கும் தேடிப்பார்த்தும் எங்கும் அவள் தென்படவில்லை. பெட்டிக்குள்மட்டும் அவள் சொல்லி வைத்த தொகை இருந்தது. அதை ஏற்றுக்கொண்டு அவ்வர்த்தகன் தன் போக்கில் போய்விட்டான். ரஞ்சித்ராயர் நாலாபக்கமும் ஆட்களை அனுப்பிப் பார்த்தும் அச்சிறுமி தென்படவில்லை. ஆதலால் தந்தை ஆழ்துயரத்தில் மூழ்கி அழுதுகொண்டிருந் தார். அப்பொழுது தடாகத்தில் ஏதோ தென்படுகிறது என்ற செய்தி அவர் காதுக்கு எட்டியது. உடனே உற்றார் அனைவரும் புடை சூழத் தடாகத்துக்கு அவர் ஓடினார். என்ன விந்தை! விலைக்கு வாங்கிய சங்கு வளையல் களை அணிந்திருந்த இரண்டு கரங்கள் மட்டும் அத்தடாகத்தின் நீர்மட்டத்துக்கு மேல் தென் பட்டன. தந்தைக்கு நமஸ்காரம் செய்கிற பாங்கில் கரங்கள் இரண்டும் தண்ணீருக்குள் மறைந்துபட்டுப் போயின. இன்றைக்கும் அப்பக்கங்களிலுள்ள மாந்தர் அச்சிறுமியைப் பகவதியின் சொரூபமாகக் கருதி வணங்கி வருகிறார்கள். விழா எடுப்பதும் அச்சிறுமி யின் மகிமையை முன்னிட்டேயாம்." இவை யாவும் நிகழ்ந்தது உண்மையே யென்று பரம ஹம்சதேவர் மகேந்திரருக்குத் தெரிவித்தார்.

பண்பாட்டை வளர்க்கும் பயிற்சி

சிறுவர் சிறுமிகளுக்குத் தரும் பயிற்சி அவர்களைச் சிறந்தவர்களாக்குகிறது. மனோ வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கு உடற்பயிற்சியின் மூலம் கல்வி புகட்ட வேண்டும். வீடு களைக் கூட்டிச் சுத்தம் பண்ணுவதிலும் தாய் தந்தையர்களுக்கு உதவியாகச் சிறுசிறு காரியங் களைச் செய்வதிலும் குழந்தைகள் பயிற்சி பெறவேண்டும். வீட்டில் பூஜை அறை ஒன்றை ஏற்படுத்தி அவ் அறையைச் சுத்தம் பண்ணுவதற்கும் பூஜாப் பாத்திரங்களைச் சுத்தம் பண்ணு வதற்கும் குழந்தைகளுக்குப் பயிற்சி தரவேண்டும். மலர் பறித்துவந்து மாலை தொடுத்துத் தெய்வத்திற்குச் சாத்துவதில் குழந்தைகள் மகிழ்ச்சி அடையலாம். ஒவ்வோர் ஊரிலும் ஆலயம் இருக்கிறது. ஆலயங்களைக் கூட்டிச் சுத்தம் பண்ணுவதிலும் கோயில் நந்தவனங் களைப் பராமரிப்பதிலும் குழந்தைகளை மகிழ்ச்சியுடன் ஈடுபடச் செய்யலாம். குழந்தைகள் ஒன்று கூடிக் காலையிலும் மாலையிலும் ஆலயத்தில் இசையுடன் பாடிப் பஜனை பண்ணலாம். குழந்தைகளைக் கொண்டே தெய்வத்துக்கு அபிஷேக ஆராதனை செய்யலாம். தெய்வத் திற்கு அபிஷேகம் செய்யப்பட்ட பொருள்களைக் குழந்தைகளுக்குப் பிரசாதமாகவும் வழங்க லாம். இவ்வாறு வழங்கப்படுகின்ற செயலையும் அவர்களைக்கொண்டே செய்யலாம். கோயில் விழாச் சமயத்தில் குழந்தைகளைக்கொண்டே ராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றில் உள்ள நிகழ்ச்சிகளை நாடகமாக நடிக்கும்படி செய்யலாம். பிடி அரிசி திட்டத்தின்மூலம் குழந்தை களுக்கு அரிசி சேகரம் செய்யப் பயிற்சி தரலாம். அவ்விதம் சேகரிக்கப்பட்ட அரிசியை ஆண்டுக்கு ஒருமுறையோ இருமுறையோ பொது இடத்தில் ஊர்க்குழந்தைகள் அனைவரும் ஒன்று கூடி அவர்களே சமைத்து அவர்களுக்கிடையில் பரிமாறி உண்டு மகிழ்ச்சி அடையலாம்.

குடும்பத்துக்கும் ஊருக்கும் பயன்படுகிற குழந்தை நாட்டுக்குப் பயன்படும். குடும்ப காரியங்களையும் கோயில் காரியங்களையும் குழந்தைகள் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் செய்யப் பயிற்சி பெறுவார்களானால் அவர்கள் எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயன்படும் நல்ல வர்களாவார்கள். பெற்றோர்களை நாள்தோறும் பாதந்தொட்டு வணங்கும் பயிற்சி வீட்டில் பெறவேண்டும். பள்ளியில் ஆசிரியரைப் பாதந் தொட்டு வணங்குதல் வேண்டும். ஆலயத் தில் இறைவன் சந்நிதிக்கு முன் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணக்கம் செய்து பழகவேண்டும். இங்ஙனம் பயிற்சி பெறும் குழந்தைகள் பண்பாடு உடையவர்களாக மாறி அமைவார்கள்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-9. ஆர்ஆரும் காணாத அற்புதனார் போற்பு [அடிக்கீழ்
நீர் ஆர் நிழல்போல் நிலாவுநாள் எந்நாளோ.

எது பஞ்சேந்திரியங்களால் நுகரப்படுகின்றதோ அது பிரபஞ்சம். மானுட அமைப்பில் உள்ள ஐம்பொறிகளைக்கொண்டு நாம் அனுபவிப்பவை அனைத்தும் இப்பிரபஞ்ச சம்பந்தமானவை. மற்று இப்பிரபஞ்சத்திற்கு ஆதாரமாயிருக்கின்ற பரம்பொருளோ பஞ்சேந்திரியங்களால் நுகரப்படுவதன்று. ஆகையினால் தான் 'ஆர் ஆரும் காணாத அற்புதனார்' எனப் பரமனைப்பற்றி அண்ணல் கூறுகின்றார்.

மானுடப் பிறவியின் நோக்கம் இப்பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பது அன்று. ஏனென்றால் இது ஓய்வில்லாத பிறவிப் பெருங்கடலாக இருக்கிறது. இதில் பல கோடிப் பிறவிகள் எடுத்துச் சலித்துப்போன ஜீவர்கள் இதை வேண்டாமென்று ஒதுக்குகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இக்கோட்பாட்டை யாவருக்கும் விளங்குகின்ற பாங்கில் தெளிவுபடுத்துகின்றார். அதாவது தாய் ஒருத்தி தன் குழந்தையின் கையில் விளையாட்டுச் சாமான்களையும், பொம்மைகளையும் கொடுத்து விளையாட விடுகின்றாள். குழந்தை விளையாடிக் கொண்டிருக்கையில் அவள் தன் வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கின்றாள். விளையாடிச் சலித்துப் போன குழந்தை விளையாட்டுச் சாமான்களையும், பொம்மைகளையும் உதைத்துத் தள்ளிவிட்டு அம்மாவை 'கோ' வென்று கதறி அழைக்கின்றது. தாயும் தன் அலுவல்களையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு அழுகின்ற குழந்தையின் துயரத்தைத் துடைத்தல் பொருட்டுக் குழந்தையிடம் ஓடி வருகின்றாள். இதே பாங்கில் அண்ட நாயகியாகிய பராசக்தி உலக மக்களுக்குப் பிரபஞ்ச வாழ்வு என்னும் விளையாட்டுக் கருவிகளை வேண்டியவாறு கொடுத்தருளியிருக்கின்றாள். உலகத்தவரும் அவைகளை வைத்து அனுபவிக்கும் பாங்கில் உலகப்பற்றில் ஊறிக் கிடக்கின்றனர். அவர்களுள் முமுட்சுக்கள் என்னும் லட்சியத்திற்கு ஆயத்தமாயிருப்பவர்கள் உலகப்பற்றை ஒதுக்கிவிட்டுப் பரநாட்டம் பூணுகின்றனர். நம் அண்ணலும் அந்நிலையை இக்கண்ணியிலே நன்கு தெளிவுபடுத்துகின்றார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்பது மறைமொழி. அற்புதனாரை அடையத் தகுதி வாய்ந்தவர்கள் யார் என்பது கேள்வி. உலகப்பற்றுடைய மக்கள் ஐம்பொறிகள் வாயிலாக அதை அனுபவித்து வருகின்றனர். உலக வாழ்வானது இன்ப துன்பம் இரண்டும் கூடியுள்ளது. இவ்வுலக வாழ்க்கை இன்பமாகத் துவங்கித் துன்பமாக முடிவுறுவது எல்லாரும் காணும் அனுபவமாகிறது. இதை வேண்டாமென்று ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பரநாட்டம் பூணுகின்றவர்களே முமுட்சுக்கள் ஆகின்றனர். ஐம்பொறிகளைக் கட்டியாளும் செயலில் வெற்றி பெறுகின்றவர்களுக்கு ஞானக் கண் தானாக வடிவெடுக்கின்றது. மக்கள் அனைவரும் ஞானம் அடைந்தே தீரவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "காசியில் மாதா அன்னபூரணியின் ஆலய அமைப்பில் கோவிலுக்குள் செல்பவர் அனைவரும் பிரசாதம் வாங்காது வெளிவரமுடியாது. ஆனால் வரிசையில் முன்னால் நிற்பவர் முதலில் பிரசாதம் பெறுவர் பின்னால் நிற்பவர் கடைசியில் பிரசாதம் பெறுவர். அங்ஙனம் மக்கள் அனைவரும் தெய்வநிலையை அடைந்தே தீருவார்கள். சிலர் இப்பிறப்பில் அடைவார்கள். மற்றவர்கள் பல பிறப்புக்களுக்குப் பின் அந்நிலையை அடைவார்கள்!" தீவிரமாக முயலுகின்றவர்கள் அதிவிரைவில் வெற்றி காணுகின்றனர். 'எந்நாளோ' என்று அண்ணல் இயம்புவது தீவிர அதிகாரியினுடைய பாங்கை விளக்குகின்றது. மந்த அதிகாரிகளும் நாளடைவில் ஞானக்கண் பெறுவது உறுதி. ஆதலால் பரநாட்ட முயர்சியில் நாமனைவரும் தீவிரமாகக் கருத்தைச் செலுத்த வேண்டும் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது. பரநாட்டத்தையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு தீவிர அதிகாரிகள் ஆவோமாக.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-17

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவி னின்று சென்னையிலிருந்த ஒரு சிஷ்யருக்கு 1894 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் அடங்கி யுள்ள கருத்துக்களாவன: மனம் போல மாங் கல்யம் என்பது வாழ்க்கைக்குரிய முக்கிய மான ஒரு கோட்பாடு ஆகும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண் ணியராகப் பெறின்'' என்பது வாழ்க்கையை யொட்டிய சிறந்ததொரு கோட்பாடாகும். நாட்டுக்குப் பணிவிடை செய்யும் விஷயத்தில் மாருத ஊக்கம் படைத்திருத்தல் வேண்டும். கொண்டுள்ள ஊக்கத்துக்கேற்ற பிரகாரம் நல்ல சூழ்நிலையும் பொருத்தமான சந்தர்ப்ப மும் தாமே வந்தமையும்.

இளைஞர்கள் சிலர் வாரத்தில்ஒருநாள்ஒன்று கூடத் தீர்மானம் செய்யவேண்டும். அப்படிக் கூடுகிற இடம் கோயிலாக இருக்கலாம், நதிக் கரையோரமாக இருக்கலாம் அல்லது ஒரு மரத் தடியில் இருக்கலாம். மனம் கொண்டது மாளிகை என்னும் கோட்பாட்டை நன்கு ஞாப கத்தில் வைததுக்கொள்க. அப்படிக் கூடு கிற நீங்கள் எல்லாரும் ஒரு பத்து நிமிஷமா வது ஆழ்ந்து தியானம் பழகுங்கள். அடுத்த படி பத்து அல்லது பதினைந்து நிமிஷம் பக்தி பூர்வமாக இறைவனுடைய திருநாமத்தை ஜபி யுங்கள். ஜபிக்கிறபொழுது உரக்கக் கத்த வேண்டாம். அடங்கிய குரலிலே உற்சாகத் துடன் நாமத்தை ஓதுங்கள். பிறகு உங்களில் யாராவது ஒருவர் பகவத்கீதை அல்லது ஏதேனும் ஒரு உபநிஷதத்தைப் பக்திபூர்வமாக மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டவேண்டும். அப்படி வாசிக்கிறபொழுது வாசிக்கின்றவர் தான் மற்றவர்களுக்குத் தொண்டு புரிகிற மனப்பான்மையுடன் வாசித்தல் வேண்டும். தான் ஒரு ஆச்சாரியன் என்னும் எண்ணம் மனத்தினுள் ஒரு பொழுதும் புகுந்து விடலா காது. அத்தகைய எண்ணத்துக்கு இடம் கொடுத்தால் அதைத் தொடர்ந்து அகங்கார மும் ஏனைய கேடுகளும் மனதினுள் புகுந்து மனிதனைப் பாழ்படுத்திவிடும்.

வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டுநாள் நீங்கள் எல்லாரும் ஒன்றுகூடி சமுதாய சேவை செய்யவேண்டும். மனதைத் தூய தாக்குதற்குச் சேவைக்கு நிகரான சாதனம் வேறு ஏதுமில்லை. காயத்தால் செய்யவேண் டிய பணிவிடையை இக்காலத்திய மாந்தர் அதிவேகமாக மறந்து வருகின்றனர். வண்டி வண்டியாகப் பேசுவதற்குப் பதிலாக ஒரு சிறிது நேரம் உள்ளன்போடு காயத்தைக் கொண்டு செய்கிற பணிவிடை சாலச் சிறந்த தாகும். முதலில் ஒரு தேவாலயத்தின் சுற்றுப் புறத்தைத் துப்புரவாக்கும் செயலில் ஈடுபடுங் கள். அது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு என்பதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் புரிகிற தொண்டைப் பார்த்துச் சிலர் ஏளனம் பண்ணுவார்கள். அப்பொழுது பொறுமையுடன் சகித்துப் பழகவேண்டும். ஏளனத்தை அமைதியாக ஏற்றுக்கொள்ளு வதன் வாயிலாக மனிதன் மனதில் தெளிவடை கின்றான். வேறு சிலர் நீங்கள் புரிகிற தொண் டைப் பார்த்துப் பாராட்டலாம். அத்தகைய பாராட்டுதலுக்கும் நல்ல தொண்டன் ஒருவன் அடிமைப்படமாட்டான். போற்றுதலும் தூற்று தலும் உலகத்தின் இயல்பு. அவ்விரண்டையும் பொருட்படுத்தாது தொண்டுபுரிவது தொண்ட னுடைய இயல்பாக இருக்கவேண்டும். உலகத் தவர் போற்றுதலையும் தூற்றுதலையும் பொருள் படுத்துவது மனபரிபாகத்திற்குப் பயன் படாது. மனபரிபாகம் அடைவது நமது குறிக் கோள். உலகத்தவர் போற்றுதலையும் தூற்று தலையும் மனபரிபாகத்திற்கு வரும் சோதனை யாக ஏற்றுக்கொள்ளவேண்டும். "என்கடன் பணிசெய்வதாகும். போற்றுதலுக்காக நான் பணி செய்யவில்லை. தூற்றுதலை முன்னிட்டு இனி நான் பணியை நிறுத்தி விடப்போவ தில்லை. நான் மேற்கொண்ட பணியை ஈசுவரப் பணியாகச் செய்து பழகுவேன். அதை நான் திறமையாகச் செய்யுமளவு ஈஸ்வரன் மகிழ்ச்சி அடைவார்.'' இத்தகைய மனப்பான்மையுடன் ஈடுபடும் தொண்டனே சிறந்த தொண்டனு வான். போற்றுதலையும் தூற்றுதலையும் சம மாகக் கருதிப்பழகுபவனே மனபரிபாகத்தில் மேன்மையடைகிறான்.

ஞான வெட்டியான் - 18

பரத கண்டம் மறுமலர்ச்சி அடைந்து வருகிற இக்காலத்தில் தேசத் தொண்டர்கள் செய்யவேண்டிய கடமை ஒன்று உண்டு. அது மலம் மூத்திரம் கழிக்கப்பட்டுள்ள இடத்தைச் சுத்தப்படுத்துவதாகும்.

நாகரிகம் படைத்துள்ள நாடுகளில் முறையாகக் கக்கூஸ் அமைக்கப் பெற்று ஆங்குச் சென்றே மக்கள் எல்லாரும் அக்கருமத்தைச் செய்து முடிக்கின்றனர். கிட்டத்தட்ட உலகில் எங்கும் எல்லா நாடுகளிலும் இப்பழக்கம் நன்கு நடைபெற்று வருகின்றது. நம் நாடு மட்டும் இத்துறையில் இதுகாறும் கருத்துச் செலுத்தாது இருந்து வருவது பாராட்டத் தக்கதன்று. ஆன்மீகத்துறையில் ஆராய்ந்து பார்த்தால் நம் நாட்டிற்கு நிகரானது வேறு ஏதுமில்லை. மற்று எங்குப் பார்த்தாலும் மலமும் மூத்திரமும் கழிக்கப்பட்ட இடங்களாகத் தென்படுவதும் நம் நாடேயாம். இந்த அநாகரிகமான பழக்கத்தை அடியோடு மாற்றியமைக்க நம் நாட்டிலுள்ள ஆடவர் மகளிர் ஆகிய எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். இது அசுசி வாய்ந்த கீழான செயல் என்னும் மனப்பான்மையை மக்கள் எல்லாரும் ஒதுக்கித் தள்ளவேண்டும். தாய்நாட்டைத் தூயதாக வைத்திருப்பது என் கடமை என்று ஒவ்வொருவனும் உணர்தல் வேண்டும். அந்த உணர்வு பிறகு செயலாக வடிவெடுக்க வேண்டும்.

மலாய் நாட்டிலே கிராமங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் கூடியிருப்பவர்கள் பெரும்பாலும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டின்படி சீனர்கள் வாழ்ந்துவரும் கிராமம் என்றும், உள்நாட்டு மக்களாகிய மலேயா மக்கள் வாழ்ந்து வரும் கிராமம் என்றும், பிழைப்புக்காக இந்தியாவினின்று அங்கே குடியேறியுள்ள மக்களின் கிராமம் என்றும் அவைகள் அமைந்துள்ளன. இந்த மூன்று இனத்தார்களுள் ஊரைச் சுற்றிலும் மலம் மூத்திரம் கழித்து அசுசிப்படுத்தியிருக்கும் கிராமங்களே இந்தியர்களுக்குரியனவாம். பிழைப்புக்காக வெளிநாட்டிற்குச் சென்ற இந்தியர்கள் மற்றவர்களைப் பார்த்தாவது இந்த நல்ல பழக்கத்தைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். கால்நடைகள் கட்டி வைத்துள்ள இடத்திலேயே சாணம் போடுவதும் மூத்திரம் பெய்வதும் போன்று இந்திய மக்கள் தாங்கள் குடியிருக்கும் கிராமத்தைச் சுற்றிலும் அசுத்தம் செய்து வருகிறார்கள்.

பண்டொரு காலத்தில் இந்தியாவில் ஜனத்தொகை மிகக் குறைவாகவிருந்தது. அக்காலத்தில் ஆச்சாரமாகக் கருதப்பட்டது ஊருக்குத் தூரத்திலுள்ள இடங்களுக்குச் சென்று மல ஜலம் கழிவதாகும். நாளடைவில் ஜனத்தொகை அதிகம் ஆக ஆக மல ஜலம் கழிதல் என்னும் நித்தியக் கடமை ஊருக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்தது. இன்றைக்கு நம் நாட்டில் எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் முதலில் துர்நாற்றம் ஒன்றே போசிறவர்கள் மனத்தைப் பாதிக்கிறது. அசுசியான இந்தப் பழக்கத்தை அறவே ஒழித்துத்தள்ள வேண்டும்.

பொது நல சேவைக்காக அமைந்துள்ள சங்கங்கள் ஊக்கத்தோடு நாட்டைத்துப்புரவுபடுத்தும் செயலில் ஈடுபடவேண்டும். ஆருயிர்களுக்குச் செய்யும் பணிவிடை ஆண்டவனுக்குச் செய்யும் பணிவிடையாகக் கருதுதல்வேண்டும். ஒவ்வொரு சங்கமும் தனக்குள் ஏழு சிறுபடைகளைப் பிரித்தெடுக்கவேண்டும். மாலை நேரத்தில் சுமார் அரை மணிநேரம் இந்தப் பொது நல சேவையில் ஈடுபடவேண்டும். படை ஒன்றுக்கு ஐந்து அல்லது ஆறு அங்கத்தினர்கள் இருந்தால் போதுமானது. கொத்து அல்லது மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு ஊருக்குள் சுற்றிப்பார்த்து எங்கெல்லாம் மலம் கழிக்கப்பட்டிருக்கிறதோ ஆங்கு எல்லாப்பக்கத்திலிருக்கிற மண்ணை வெட்டி எடுத்து மலத்தை மூடுதல்வேண்டும். தாய் நாடாகிய பாரத தேவிக்குச் செய்கின்ற அரும்பணிவிடையாக அதைக் கருதுதல் வேண்டும். ஒரு மாதத்திற்குள் கிராமமே புதுப்பிக்கப்படுவதை இத்தொண்டர்கள் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். தேசபக்தி நிறைந்துள்ள இளைஞர்கள் இந்த அரிய பணிவிடையில் மனமுவந்து ஈடுபடுவார்களாக.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

165. सदायोगी ஸதாயோகீ யாண்டும் யோகியாக இருப்பவன்.

சரீரம் எடுத்துள்ள மக்கள் தங்களுடைய பாங்குகளை விளக்குகின்றனர். அப்பாங்குகளை யோகம், போகம், ரோகம் என்று இயம்பலாம். அவர்களுள் நல்வாழ்க்கைக்குத் தகுதியற்றவர்களை ரோகிகள் அல்லது நோயாளிகள் எனப்பொருள்படுத்த வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஐதிகம். பிரபஞ்சம் தருகின்ற வசதிகளையெல்லாம் நன்கு பயன்படுத்தி இன்புற்று வாழ்ந்திருப்பவன் போகி எனப்படுகின்றான். இந்த இரண்டுபடித்தரங்களுக்குமேல் நோயற்ற வாழ்வும், அடக்கத்தில் நிறைவும் வாய்க்கப்பெற்றவன் யோகியாகிறான். அன்னவனே மக்களுள் மேலானவன் எனப்பாராட்டப் பெறுகிறான். யோகி ஒருவனுக்கு வாழ்நாள் முழுதிலும் மேன்மையும் மகிழ்வும் சேர்ந்து அமைந்திருக்கின்றன. போகி எனப்படுகின்றவன் ஐம்பொறிகளையும் புலன்களில் செல்லும்படி செய்து வருகிறான். அவனுக்கு வாழ்வு இன்பமாகத் துவங்கி துன்பமாக வடிவெடுக்கிறது. இனி ரோகி என்பவன் யாண்டும் நோய்க்கு ஆளானவனாகவிருந்து துன்பத்தில் மூழ்கிக் கிடக்கின்றான். இந்த மூன்றுவிதப் படித்தரங்களுள் யோகியாயிருப்பவனே தலை சிறந்தவனாகிறான். அவனுடைய வாழ்வும் தலைத்தரமானதாம். அத்தகைய பெருநிலையில் பகவான் இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. பகவான் யாண்டும் நலமுடையான், கேடற்றவனாகின்றான். அந்நிலையடைவதே மக்களுடைய குறிக்கோளாகிறது. மக்கள் தாம் தாம் வாழ்ந்து வருகிற வாழ்க்கையின் வாயிலாக யோகிகள், போகிகள், ரோகிகள் எனப்பிரித்து வைக்கப்படுகின்றனர். மானுட ஜன்மத்தின் சிறந்த குறிக்கோளாயிருப்பது யோகம். 'நோய்க்கு இடம் கொடேல், என்னும் கோட்பாட்டுக்கு உட்பட மக்கள் எல்லாரும் ஆரோக்கியம் அல்லது நோயின்மையைக் காத்து வருவது அவர்களுடைய கடமையாகும். மற்று மக்கள் எல்லாரும் எடுத்த எடுப்பிலேயே யோகிகளாக முடியாது. ஆதலால்தான் போகத்தில் ஈடுபடுகிறவர்கள் அடக்கத்தில் அளந்தெடுத்து வரம்புக்கு உட்பட்ட பாங்கில் போகத்துக்கு உள்ளாகவேண்டும் என்னும் நியதி ஏற்பட்டிருக்கிறது. யாண்டும் போகியாகவே இருந்து வருவது நலனில் நாட்டமுடையவனுக்குப் பொருந்தாது என்பது தேற்றம். வரம்புக்கு உட்பட்ட போகத்தில் இறங்குகின்றவன் தன் கருத்தில் பெரும் பகுதியை பகவத் பக்தியில் ஈடுபடுத்தவேண்டும். அப்படிச் செய்வதால் போகத்தில் அதிவிரைவில் அவனுக்கு விரக்தி வந்து அமைகிறது. இனி பிறப்பிலிருந்தே யோகத்தில் நாட்டம் படைத்துள்ள நல்லார்கள் சிலர் சமுதாயத்தில் வந்து அமைகின்றார்கள். அன்னவர்களுடைய வாழ்க்கையே மக்கள் எல்லார்க்கும் முன்மாதிரியாக வந்து அமைகிறது. பகவான் தானே ஸதா யோகியாயிருப்பதால் அப்பரம புருஷனை நாடிப் பக்திபண்ணுகிறவர்கள் எல்லார்க்கும் யோகம் என்று சொல்லப்படுகின்ற நல்ல நிலை தானாக வந்து அமைகின்றது.

166. वीरहा வீரஹா அசுர வீரர்களை ஒழிப்பவன்.

பிரபஞ்ச வாழ்விலே திண்ணியராகச் சிலர் வந்து அமைகின்றனர். அன்னவர்களில் சிலர் தங்களுடைய ஆற்றல்களை முறை தவறிக் கையாண்டு சமுதாயநலனுக்குக் கேடு விளைவிக்கின்றனர். அத்தகைய பொருளற்ற வீரர்களைச் சூரர் எனப் பகர்வது பொருந்தும். சமுதாயத்துக்குக் கேடு செய்கின்ற ஒருவன் நெடுநாள் வாழ்ந்திருப்பதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு தன்னுடைய ஆற்றல்களையெல்லாம் தீய செயல்களில் செலுத்திச் சமுதாயத்திற்குத் துன்பம் விளைவிக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அதிவிரைவில் தானே அழிந்துபட்டுப் போகின்றான். அவனுடைய அழிவுக்கு முகாமையாயிருப்பது ஈசனுடைய செயலாம். ஆதலால் அவன் வீரஹா என்று அழைக்கப்பெறுகிறான்.

167. माधवः மாதவ: — தவன் என்னும் பதம் தலைவன் எனப் பொருள்படுகிறது. மா என்னும் பதம் லக்ஷ்மி தேவியைக் குறிக்கிறது. ஞானம் என்றும் அது பொருள்படுகிறது. பகவானை முறையாக வழுத்தி அவனோடு

யோகம் பண்ணுகிற ஆத்ம சாதகன் அதிவிரைவில் ஞானத்தில் மேலோங்குகிருன். மஹாவிஷ்ணுவை மாதவன் என அழைக்கின்றபொழுது அவன் லக்ஷ்மி தேவிக்குத் தலைவன் எனப் பொருள்படுகிறது.

168. मधुः மது: — தேன் போன்றவன்.

மது அல்லது தேனில் சிறப்பொன்று உண்டு. உயிர் வாழ்வன அனைத்தும் ஏதேனும் ஒரு விதத்தில் உணவைத் தேடி அதை முறையாகப் புசித்து உயிர் வாழ்ந்து வருகின்றன. உணவு வகைகளுள் எது மிக மேலானதோ அது மலமாகமாறுவது மிகக் குறைவு. அத்தகைய உணவையே தலை சிறந்த உணவு என அறிஞர்கள் பாராட்டுகின்றனர். அங்ஙனம் அமைந்துள்ள உணவு வகைகளுள் உச்சநிலையிலிருப்பது மது அல்லது தேன். அதன் சிறப்பு அதில் இம்மியளவும் மலமாவது இல்லை. ஆகையினல் தான் மதுவைத்தேவாமிர்தமாகக்கருதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். 'நலமுடையான் கேடு இல்லான்,'என்னும் சிறப்பு பகவானுக்கேஉரியதாம். அதே விதத்தில் நலன் முழுதும் அமையப்பெற்றும் கேடு சிறிதும் இல்லாதிருப்பதும் தேனுக்கு அமைந்துள்ள மேன்மையாம். வித்தைகளுள் தலையான வித்தையாயிருப்பது பரஞானம். பரஞானத்துக்கு ஏற்ற பதமாயமைந்திருப்பது மது என்பதாம். இதே வித்தையைப் பிரம்ம வித்தை என்றும் சிவ ஞானம் என்றும் ஸ்ரேயஸ் என்றும் அழைப்பது ஐதிகம். இத்தகைய பர வித்தையின் வடிவாகப் பகவான் அமைந்திருப்பதால் அவனை மது என்று அழைப்பது பொருந்தும்.

169. अतीन्द्रियः அதீந்த்ய: — பொறிபுலன்களுக்கு எட்டாதவன்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்துவகைப் புலன்கள் மயமாகப் பிரபஞ்சம் இருக்கின்றது. ஞானேந்திரியங்கள் ஐந்தையும் கையாண்டு பெறுகின்ற ஞானம் அபரா வித்யா என்று பொருள்படுகிறது. இப்படி அடையப்பெறுகிறஞானம் சிற்றுயிர், பேருயிர் ஆகிய எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. பரஞானத்தைப் பெறுதற்கு இந்த ஐந்து பொறிகளும் சிறிதேனும் பயன்படமாட்டா. கடவுள் என்னும் பதம் பிரபஞ்சத்தைக் கடந்தும் அப்பிரபஞ்சத்தின் உள்ளே மிக சூட்சும மயமாக ஊடுருவியும் இருக்கிறவன் எனப் பொருள்படுகிறது. ஐம்பொறிகளை அடக்கி ஆளுகின்ற யோகிக்கே பரஞானம் கை கூடுகின்றது. பொறிகளைக் கட்டியாளுதல் மனிதனுக்குத்தான் சாத்தியம். இவைகளை அடக்கியாளத் தெரிந்துகொள்ளாத மக்கள் மாக்கள் என அழைக்கப்பெறுகின்றனர். உயிர் வகைகளுள் ஐம்பொறிகளைக் கட்டியாளும் திறமை அலாதியாக மனிதனுக்கே உரியதாம். பிறவியிலிருந்தே ஐம்பொறிகளைக் கட்டியாளும் திறமை அலாதியாக மக்களுள் ஒரு சிலர்க்குத்தான் சாத்தியமாகிறது. பொறிபுலன்களை முறையாகக் கட்டியாளுதலின் வாயிலாகவே மானுடன் பரிபாகத்தில் மேலோங்குகிருன். அறவே இந்திரியங்களை அடக்கியாளக் கற்றுக்கொண்டவன் தெய்வ சொருபமாகத் திருந்தியமைகின்ருன். 'அஹம் பிரம்மாஸ்மி, என்னும் மஹா வாக்கியத்தை முறையாகக் கையாளும் திறமை அத்தகைய ஜிதேந்திரியனுக்கே சாத்தியமாகிறது. ஆகையினல் தான் 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்ருர் நீடுவாழ்வார்' என்னும் கோட்பாடு வந்துள்ளது.

170. महामायः மஹாமாய: — மாயையின் வல்லமை அவருக்குச் சொந்தம்.

பரவஸ்து முற்றிலும் தன்மயமாய் இருக்கின்றபொழுது அது பரப்பிரம்மம் என அழைக்கப் பெறுகின்றது. அதே மெய்ப்பொருள் தன்னுடைய விபூதிகளுடன் சேர்ந்திருக்கின்ற பொழுது சகுணப் பிரம்மம் என்றும், ஈஸ்வரன் என்றும் அழைக்கப் பெறுகிருன். அவனுடைய பாங்கைப் பரமஹம்சதேவர் ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகின்ருர். ஜால வித்தைக்காரன் ஓரிடத்தில் சென்று தன்னுடைய வித்தைகளையெல்லாம் விளக்கிக் காட்டி மக்களை மகிழ்விக்கிருன். பிறகு தன்னுடைய உபகரணங்களை யெல்லாம் முட்டை கட்டிக்கொண்டு மற்ருேரிடத்திற்குப் போகிருன். ஜாலவித்தைக்காரனுகிய புருஷன் நித்திய வஸ்து. அவன் காட்டுகின்ற வேடிக்கைகளெல்லாம் வெறும் தோற்றங்களாம். இதே பாங்கில் பரம்பொருள் நித்திய வஸ்து. அவன் காட்டுகின்ற பிரபஞ்சம் வெறும் தோற்றமாம்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (463) இறந்துபோன ஜீவன் மறுபடியும் எந்த விதமாக மற்றோர் ஜீவனிடத்தில் போய்ப் பிறக்கிறான்?

இறத்தல் என்னும் செயல் ஓர் இடத்தை விட்டு மற்றோர் இடத்திற்குப் பயணம் போவது போன்றது அன்று. இறந்து போன ஜீவன் உடலை அறவே மறந்துவிட்டான். போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியன் என்னும் கோட்பாடு ஈஸ்வரனுக்கு உண்டு. அதே கோட்பாடு தான் சிறிய அளவில் ஜீவனுக்கு உண்டாகிறது. அயர்ந்து உறங்குதற்கு நிகர் மரணம். உறங்குகின்றவன் தாற்காலிகமாக உடலை மறந்திருக்கிறான். இடம் அல்லது தேசம் என்பது மனதின் கற்பனையாம். அதே பாங்கில் காலம் என்பதும் மனதின் சிருஷ்டியாம். மனதற்ற நிலையில் காலமில்லை, தேசமில்லை, செயலில்லை. தூங்குகின்றவன் தாற்காலிகமாகக் கால தேச நிமித்தத்தை மறக்கிறான். விழித்துக் கொண்டவுடன் பழைய இடத்தைப்பற்றிய ஞாபகமும், தான் குடியிருக்கும் உடலைப்பற்றிய ஞாபகமும் அவனுக்கு வருகிறது. இறந்து போகின்றவன் நிரந்தரமாகத் தான் வாழ்ந்து வந்த உடலை ஒதுக்கித் தள்ளுகிறான். இறந்தவன் மறு லோகத்திற்குப் போவதும் அங்கு சுகம், துக்கம் ஆகியவைகளை அனுபவிப்பதும் இகலோகத்தில் இருப்பவர்களின் கற்பனையாம். ஓர் உடலை விட்டு ஒதுங்கிய ஜீவன் தன்னில்தானாக இருக்கிறான்.

ஸ்தூலசரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்று கூறுகளுள் ஜீவன் ஒதுக்கித் தள்ளியது ஸ்தூல சரீரம் ஒன்றுதான். மற்று, மாண்டு போனவனே தன்னுடைய சூட்சும சரீரத்திலும், காரண சரீரத்திலும் ஒடுங்கியுள்ளான். பொருத்தமான சூழ்நிலை தனக்கு அமைகின்றபொழுது அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அவன் தனக்குத்தானே புதிய உடல் ஒன்றை சிருஷ்டி பண்ணுகின்றான். மாதாவின் உதரத்தில் வடிவெடுத்து மறுபடியும் பிறக்கின்றான். போதல் வருதல்என்னும் செயல் பூத உடல் மயமாயுள்ள இப்பிரபஞ்சத்திற்கு உரியது. சூட்சுமசரீரத்தில் இருக்கின்ற ஜீவனுக்குப் போக்கும் வரவும் புணர்வும் இல்லை. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விதை செடியிலிருந்து உண்டாகின்றது. பிறகு செடி பட்டுப்போகின்றது. விதை தன்மயமாயிருக்கின்றது. அதற்குப் பொருத்தமான சூழ்நிலையை மக்கள் செய்து வைக்கின்றனர். மக்களின் எண்ணத்திற்கு ஏற்ப ஒரு நாட்டினின்று எடுத்து வந்த விதை மற்றொரு நாட்டில் பொருத்தமான சூழ்நிலையமையுங்கால் ஆங்கு அது வளர ஆரம்பிக்கின்றது. அதைக் கவனிக்கின்ற மற்றவர்களுக்கு அச்செடியானது புதிய இடத்தில் வடிவெடுக்கிறது. செடியைப் பொருத்த வரையில் தன்னைத்தான் அது தோற்றுவித்துக் கொள்ளுகிறது. பொருத்தமான சூழ்நிலை அல்லது மண்ணில் அது முளைக்குமிடத்துப் புதிய பிறப்பில் அது மேல் நிலைக்கு வந்துள்ளது. பொருத்த மற்ற இடத்தில் அது முளைத்து வருமிடத்தில் அது கீழ் நிலையில் பிறந்துள்ளதாகிறது. அது இடம் மாறிய செயல் தனக்குத்தானே செய்து கொண்டது அன்று.

ஜீவன் ஒருவன் புதிய பிறப்பு எடுக்கின்ற பொழுது தன் பாங்குக்கேற்ற சூழ்நிலையைத் தனக்குத்தானே செய்து கொள்கின்றான். சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் மடிந்து போன மாணுக்கன் ஒருவன் அமெரிக்காவில் தனக்குப் பொருத்தமான தந்தை தாய்க்கு மகவாகப் பிறந்தான். அப்படிப் பிறந்தவனுக்குத் தற்செயலாய்ப் பூர்வ ஜன்ம ஞாபகம் வந்தது. அதை மற்றவர்களுக்கு எடுத்து அவன் சொன்னான். அவன்கூற்றை ஆராய்ச்சிசெய்து பார்த்த பொழுது அவன் கூற்று உண்மை என்று நிரூபிக்கப்பட்டது. பொதுவாக மடிந்துபோன ஜீவன் ஒருவன் பழைய சூழ்நிலையை மறந்து விடுகின்றான். இயற்கையின் நியதிப்படி அது மறைத்தல் என்னும் பெயர் பெறுகின்றது. மறைத்தல் என்னும் செயல் இறைவனுக்குரியது. பழைய ஜன்மத்தின் ஞாபகம் உயிர்களனைத்திற்கும் உண்டாகுமானால் அது பெரிய குழப்பத்தில் வந்து முடியும். ஆதலால்தான் இறைவன் கிருபை கூர்ந்து அதை மறைத்து வைத்திருக்கின்றான். இலங்கையில் மடிந்து போன மாணுக்கன் கப்பலிலோ அல்லது

ஆகாயவிமானத்திலோ அமெரிக்காவுக்குப் பயணம் போனவன் அல்லன். இடத்தைப்பற்றிய உணர்ச்சி ஸ்தூல சரீரம் எடுத்திருக்கிறவனுக்கு உண்டாகிறது. மற்று, சூட்சும சரீரத்திலிருக்கின்றவன் ஒரு பிறவியில் ஏதேனும் ஓர் உலகில் தோற்றத்திற்கு வந்தவனாக இருக்கலாம். அடுத்த பிறவியில் பலகோடி மைல்களுக்கப்பால் இருக்கின்ற மற்றோர் உலகத்தில் பிறக்கலாம். ஆதலால்தான் போக்கும் வரவும் ஆத்மாவுக்கு இல்லை என்ற கோட்பாடு வந்திருக்கிறது. வினைக்கேற்றபடி ஜீவன் ஒருவன் மேல்நிலையில் அல்லது கீழான நிலையில் மறுபிறப்பு எடுக்கிறான் என்பது தேற்றம்.

கேள்வி: (464) புத்த மதம் இந்தியாவில் அழிந்தது ஏன்?

புத்த மதம் இந்தியாவில் அழிந்துபட்டுப் போகவில்லை. இப்பொழுது நம் நாடு எங்கும் அனுஷ்டித்து வருகின்ற ஹிந்து மதம் என்பதில் முக்கால் பகுதி புத்தமதமாகவும் எஞ்சியிருக்கின்ற கால்பகுதி மட்டும் பழைய வைதிக மதமாயிருந்து வருகிறது. ஆகமம் என இயம்பப்பெறுகிற ஹிந்துமதக் கோட்பாடுகள் உண்மையில் புத்தமதமாம். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் கோட்பாடு புத்த மதத்தினின்று வந்ததாம். புத்தர் பெம்மான் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு அவதரித்தவர். அவர் புகட்டிய மதத்தில் இரண்டு கூறுகள் உள. பொது மக்களுக்கென அமைக்கப்பட்டது பஞ்சசீலமாம். அவையாவன அஹிம்சை, ஸத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்ரஹம் என்பனவாம். இந்த ஐந்துவித ஒழுக்கங்களைத் தமிழ் மொழியில் எடுத்து இயம்புங்கால் அவை கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிபுலனில் செல்லாமை, பொருள்மிகப் படையாமை எனப்படுகின்றன. மற்றுத் தீவிரமாக மத அனுஷ்டானத்தில் ஈடுபடுகின்ற பண்பட்டுள்ள அதிகாரிகளுக்கு அவர் நிர்வாணம் என்னும் கோட்பாட்டைப் புகட்டினார். இரண்டாவது இயம்பிய கோட்பாட்டைச் சரியாக அறிந்து கொள்ள முடியாத ஒரு இயக்கத்தில் அது சூனியவாதமென வடிவெடுத்தது. சண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் கீழ்நிலைகள் அனைத்தும் அதனின்று வடிவெடுத்தன. அது லோகாயதம் எனப் பெயர் பெற்றது. அந்த லோகாயதத்தை நாட்டினின்று கிளப்பிய பெருமை ஆதிசங்கராச்சாரியருக்கே உண்டு. அவர் புத்தமதத்திலுள்ள நன்மைகளனைத்திற்கும் ஆகமம் என்னும் பெயர் கொடுத்து வைதிக மதத்தோடு இணைத்தார். நாஸ்திக மதத்திற்குப் புத்தமதம் என்னும் பெயர் கொடுத்து நாட்டினின்று விரட்டியோட்டினார். அத்தகைய நாஸ்திகத்திற்கு மட்டும் புத்தமதம் என்னும் பெயர் கொடுத்து அதை ஒதுக்கித்தள்ளுமாறு போதித்தார்.

கேள்வி: (465) ஹிந்து மதத்தை அழிக்க நம் நாட்டினுள்ளே வந்துள்ள இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் ஆகிய இரண்டும் தீவிரமாகத் தங்கள் கொள்கையைப் பரப்பி வருகின்றன. இதன் விளைவு என்ன ஆகும்?

இது இக்காலத்திய சரித்திர பூர்வமான நிகழ்ச்சியாகவிருந்து வருகிறது. இதைக் குறித்து விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவிலே சர்வமத மகாசபையிலே விடை கொடுத்திருக்கின்றார். அவர் பகர்ந்ததாவது: "ஹிந்துமதம் உலகிலுள்ள ஏனைய மதங்கள் அனைத்துக்கும் தாய் மதமாக இலங்கி வருகிறது. இதைத் தாக்குதற்கு இயக்கங்கள் பல இடையிடையே தோன்றி வருகின்றன. அப்படி வந்த இயக்கங்களனைத்தும் கடற்கரையை விழுங்குதற்குக் கடலினின்று தோன்றி வருகிற பெரிய அலைகள் போன்றிருந்தன. மோதிய அலைகள் பின் வாங்கிய பிறகு சமுத்திரக் கரை பழையபடி அசையாதிருந்து பயன்படுவது போன்று ஹிந்து மதமும் சாஸ்வதமாயிருந்து வருகிறது. உண்மையை யாரும் அழிக்க முடியாது. பொய்யை நிரந்தரமாக நிலைநாட்டவும் முடியாது. இதுவே சனாதன தர்மத்தின் கோட்பாடாம். புதிதாக வந்து தாக்குகின்ற இஸ்லாமிய மதத்திலும் கிறிஸ்தவ மதத்திலும் உள்ள நலன் தரும் கோட்பாடுகளை ஹிந்துமதம் தனக்குரியதாக எடுத்துக்கொள்ளும். தத்துவத்தோடு முரண்படுகின்ற பொருந்தாத கோட்பாடுகளையெல்லாம் அது ஒதுக்கித் தள்ளிவிடும். ஹிந்து மதம் யாண்டும் உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் தாய் மதமாகவே இலங்கி வரும்.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

இறைவனின் தெய்வீகப் புதல்வர்களாகிய அவதார புருஷர்கள் அனைவரும் சிறந்த வேதாந்த தத்துவங்களின் உருவகமாகவே திகழ்கின்றனர். இறைவனின் இப்பெரும் திட்டத்தில் யேசுகிறிஸ்து விதிவிலக்கு அல்லர். தம்முடைய சீரிய வாழ்க்கையின்மூலம் இறைவனின் திட்டத்தை அவர் நிறைவேற்றினர். ஜீவவியக்தியைத் துறந்து பரமாத்மாவுடன் ஒன்றித்து இருப்பதே ஜீவனின் கடமையாகும். ஓர் உவமையால் இதை உணர்த்தலாம். அலை தனது நாமத்தையும், ரூபத்தையும் துறந்து சமுத்திரத்தில் கலக்கும்போது அது சமுத்திர மயமாகிவிடுகின்றது. அலை அப்போது அடையும் நிலை அதனுடைய சொருபமாகின்றது. சரீர அபிமானத்தால் ஆத்மா தனது நிஜ நிலையைத் துறந்து ஜீவனாக மாறுகின்றது. சரீரத்துடன் கூடிய இந்த அபிமானம் விலக்கப்பட வேண்டும். சரீரம் அநித்யம்; ஆத்மா நித்யம். யேசுவின் சரீரம் சிலுவையில் அறையப்பட்டது; அவருடைய ஆத்மா தனது நிஜசொருபத்தில் நிலைபெற்று இருந்தது. அதுவே resurrection ஆகும். ஒவ்வொரு ஜீவனும் எய்த வேண்டிய நிலையை அவர் இவ்வாறு உணர்த்திக் காட்டியுள்ளார். சரீரத்தின் மூலம் விளக்கப்பட்ட இந்த உண்மை ஆன்மீகத்தில் அடைய வேண்டிய பெரிய நிலையை உணர்த்த வேண்டும். இந்தக் காரணத்தால் யேசுவை ஒரு அவதார மூர்த்தியாக ஹிந்து ஏற்றுக்கொள்கிறான்.

தூய்மை என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டுமே உரியது அன்று. சமய ஆசாரியர்கள் அனைவரும் தூய்மையே வடிவெடுத்தவர்கள். இத்தகைய ஞானிகள் எங்குத் தோன்றினலும், எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் அவர்களைப் போற்றுவது ஹிந்து ஒருவனுக்கே வாய்க்கப்பட்ட சிறப்பான, பெருந்தன்மையான குணம் ஆகும். எனவே ஹிந்து தன்னுடைய வழிபடு மூர்த்திகளின் நடுவில் யேசுவின் படத்தை வைப்பதற்குத் தயங்குவதில்லை. (ஆயின் பிற மதத்தினர் இத்தகைய பெருந்தன்மையை உள்ளபடி உணருவதில்லை. ஹிந்துவிடம் யேசுவின் படத்தைத் தரும் கிறிஸ்துவ அன்பர்கள், அவரிடமிருந்து கண்ணன் படத்தையோ முருகன் படத்தையோ ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் படைத்திருக்கின்றனர்களா? என்பது கேள்விக்குரியது. 'வேறு மத வழிபாடே எங்களுடைய இடத்தில் நடக்கக் கூடாது; அப்படி நடந்தால் தண்டிப்போம்' என்று கூறும் அரேபிய முஸ்லீம்களின் மனப்பான்மையையும் நாம் ஆராயவேண்டும்.)

சமய ஆசாரியர்கள், அனுபவ ஞானிகள் மூலமாக ஒரு பெரும் ஆன்மீக விருந்தை இறைவன் நமக்குப் படைத்துள்ளார். இதை ஏற்க மறுக்கும் மதவாதி மிகவும் பரிதாபத்திற்கு உரியவன்! மனிதன் தனிப்பட்ட மூர்த்தி வழிபாட்டில் தொடங்கி, அனைத்தையும் அரவணைக்கும் சமரசப் பேருணர்வில் விழித்தெழுவான் ஆகுக! ஹரி ஓம் தத் ஸத்!

'யேசு கிறிஸ்துவை ஹிந்து எப்படி ஆராய்கிறான்' என்ற தலைப்பில் சுவாமிஜி உரை நிகழ்த்தினர். அதன் பின் கேள்வி—பதில் நிகழ்ச்சி ஆரம்பம் ஆகியது.

கேள்வி : 1. "நான் ஒருவன் தான் தேவனின் மகன்; அவனுடைய ஆதர்ச விளக்கம், revelation" என்று யேசுவே கூறியுள்ளார். அவருடைய நேர் சீடர்களும் இக்கருத்தை வலியுறுத்தினர்.

பதில் : "என்னுடைய மந்தைக்குள் உட்படாத வேறு சில ஆடுகளும் என்னிடம் உள்ளன" என்று அவரே கூறியுள்ளார். அதை நீங்கள் எப்படி வியாக்கியானம் செய்வீர்கள்?

கேள்வி: 2. பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் "என்னிடத்தில், மயி ஏவ, மனதை நிலை நிறுத்திக் கொள்" என்று கூறுகின்றரே!

பதில் : அவர் சுட்டிக்காட்டும் 'என்னிடத்தில்' என்ற பதத்தால் ஈசுவரனிடத்தில் என்று பொருள் தரப்படும். அது வசுதேவன் தேவகி மைந்தனாகிய கிருஷ்ணனிடத்தில் என்ற பொருளில் அன்று. யாரோ ஒரு குறிப்பிட்ட பெற்றோரின் மகனைக் குறிப்பது அன்று; ஏதோ ஒரு குறிப்பிட்ட சரீரத்தில் தோற்றத்திற்கு வந்திருக்கும் ஈஸ்வரனையே குறிக்

கின்றது.

ஓர் ஊரில் நல்ல பாகவதர் இருக்கிறார். "இசை கற்க வேண்டும் என்றால் நீ என்னிடத்தில் மட்டுமே வரவேண்டும்" என்று அவர் கூறினால், அப்பகுதியில் வேறு இசைக் கலைஞர்களே இல்லை என்று பொருள்படுமா? கணித அறிஞர் ஒருவன், "என்னிடம் வராவிட்டால் நீ கணிதம் கற்க முடியாது" என்று கூறுவது ஏற்கத்தக்கதா? காட்டில் அலைந்து திரியும் ஒருவனைக் கண்டு வழிகாட்டி "என்னைப் பின் தொடர்ந்து வா" என்று கூறுகின்றான். அதே போல் யேசுவும், "நானே வழி" என்று கூறுகின்றார். இயற்கைத் தாய் ஞான ஆசிரியர்களை உற்பத்தி செய்யும் சக்தியை இழந்து விட்டாள் என்று பொருள்படுமா? இப்படிக் கூறுவதால் இறைவனின் அளவற்ற சக்திக்கு நீ எல்லை காட்டுகின்றாய்! பல ஆயிரக்கணக்கான அவதார புருஷர்களைத் தோற்றுவிக்கும் பேராற்றல் படைத்த இறைவனை நீ மாசுபடுத்துகின்றாய்! ஒவ்வொரு காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட நெறி முறை தேவைப்படுகின்றது. அதற்கேற்ற ஞானியைத் தோற்றுவிக்கும் பேராற்றல் இறைவனுக்கு உண்டு. ஒரு குறிப்பிட்ட அவதாரத்தில் கூறப்பட்டது நடந்து இருக்கலாம், இல்லாமற் போகலாம். உலக வரலாற்றில் இதற்குத் தேவை உண்டு. இதைப் புரிந்துகொள்ள மறுத்தால், உண்மையை, சரித்திரத்தைப் பார்க்காத குருடனாக இருக்கின்றாய் என்று பொருள். உண்மையை நாடும் சாதகன் மனப்பான்மை இதுவன்று. உலகில் பல காலகட்டங்களில் ஞானிகள் பலர் தோன்றியுள்ளனர். அவர்களைப் பற்றிய உங்கள் கருத்து யாது? அவர்கள் அனைவரையும் ஒதுக்கித் தள்ளி விடுவீர்களா? அப்படிச் செய்வது குறுகிய மனப்பான்மை, மதவெறித்தனம்; நல்ல முறையில் ஆராய்ச்சி செய்பவர் பாங்கு அன்று. இசை வல்லுநர்கள் அநேகர்; கணித அறிஞர்கள் ஏராளம். அவ்வண்ணம் உலக சமுதாயத்தின் மேன்மைக்காகப் பல ஆயிரம் மெய்ஞ்ஞானிகள் தோன்றவேண்டும்.

யேசு ஒருவர் மூலமே மோட்சம் அடைய முடியும் என்று வாதம் செய்கின்றீர்கள். அப்படியென்றால் யேசுவிற்கு முன் தோன்றியவர்கள் கதி யாது? கிறிஸ்து பிறந்து 2000 வருடங்களே ஆகின்றன. எனவே 3000, 5000 வருடங்களுக்கு முன் பிறந்தவர்கள் அதேகதிதான் அடையவேண்டுமா? இந்தக் கேள்விக்கு என்ன பதில்? யேசு ஒருவர்தாம் வழிகாட்டி என்று சொல்வது சிறுபிள்ளைத்தனம், அல்ப புத்தியைக் காட்டுகின்றது. இறைவனின் சக்தியை மனிதனால் அளக்க முடியாது; தன்னுடைய வசதிக்காக அவருடைய சக்தியை, பெருமையைக் குறைப்பது அறிவுடைமை அன்று. அப்படிச் செய்வது மத நம்பிக்கையுள்ளவர் செயல் அன்று. குறுகிய புத்தி உடைய மதவெறியாளரின் மனப்பான்மையே.

கேள்வி: 3. "ஆபிரஹாமிற்கு முன்பே நான் இருந்தேன்" என்று யேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்?

பதில்: 'நான்' என்று அவர் குறிப்பிடுவது ஈஸ்வரனையே அன்றி, மேரியின் புதல்வனை அன்று. ஸ்ரீ கிருஷ்ணனும் பகவத் கீதையில் 'மாம்—என்னை' என்று உரைக்கும் போது ஈஸ்வரனையே குறிப்பிடுகின்றார். அதுதான் சரியான நிலை. அத்தகைய தெய்வீகத் தன்மை எல்லா ஜீவனிடமும் உள்ளது. எனவே தத்தம் அளவில் அனைவரும் அவதார புருஷர்களே! எல்லா ஜீவர்களுக்கும் அந்த உரிமை உள்ளது. ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கே அது சாத்தியம் என்பதுஉண்மையன்று. அவதாரங்கள் எண்ணிலடங்கா. அந்தப் பெரியநிலைக்குப் பரிணமிப்பது அனைவருக்கும் சாத்தியம்.

கேள்வி: 4. சில குறிப்பிட்ட தத்துவங்களில் எல்லா அவதாரங்களும் சமம். ஆனால் அவர்களிடையே வேறுபாடும் உள்ளது. புத்தரையே எடுத்துக் கொள்ளுங்கள். புத்த மதம் இந்தியாவில் தோன்றியது. ஆனால் இந்தியாவை விட்டே வெளியேறி விட்டதே!

பதில்: ஹிந்துமத சடங்குகளில் எழுபத்தைந்து சதவீதம் புத்த மதத்தில் இருந்து வந்தவை என்று உங்களுக்குத்தெரியுமா? எனவே பெயர் மட்டும் தான் இல்லை. புத்தருடைய கொள்கைகள், வழிபாட்டு முறைகள் இன்னும் இந்தியாவில் நிலையாக உள்ளன.

கேள்வி: 5. புத்த மதத்தின் கொள்கையே வேறுபட்டது தானே?

பதில்: புத்தமதவாதி யாராவது இவ்வாறு கூறினால், அது அவரது அறியாமை

யைக் குறிக்கும். கணக்கு ஒன்றைச் சரியாகப் போட்டு விடையைக் கண்டுபிடிக்கின்றான். 'உன்னுடைய விடை தவறு' என்று எவரா வது கூறினால், அவன் உண்மையை அறியாத வன் என்றுதான் பொருள்.

(கூட்டத்தில் ஒருவர்): ''புத்த மதத்தில் பல பிரிவுகள் உள்ளன. புத்த மதத்தை ஹிந்து மதம் ஏற்றுக் கொண்டுள்ளது. புத்தரை ஹிந்துக்கள் வழிபடுகின்றனர்.''

சுவாமிஜி: ''கைலாசமலையை புத்தர்களும், ஹிந்துக்களும் ஒருசேர வழிபடுகின்றனர். ''நூற்றுக்கணக்கான புத்தர்கள் இங்கே நிர் வாணம் அடைந்துள்ளனர். எனவே எங்க ளுக்கு இது புண்ணிய பூமி'' என்று புத்த மதத்தினர் கூறுகின்றனர். ''ஞானிகள் பலர் இங்கே மோக்ஷமடைந்துள்ளனர்'' என ஹிந்து பெருமை அடைகின்றான். நிர்வாணம், மோக்ஷம், பேதமற்றவை; இரு மதத்தினரும் ஒரே பனி மலை சிகரத்தைப் போற்றுகின்றனர். ஹிந்துக் கள் நிர்வாண நிலையை மறுப்பது கிடையாது. புத்தர் நிர்வாணம் அடைந்தார் என்பதின் மூலம் வேதாந்தம் கூறும் பெரிய நிலையை ஹிந்து குறிப்பிடுகின்றான். புத்தர் கடவுளைப் பற்றித் திட்டவட்டமாகப் பேசாது மௌன மாக இருந்தார். கடவுள் இருக்கின்றாரா, இல்லையா என்ற வாதம் செய்யவில்லை. 'சம் சார சக்கரத்தின் பிடியில் இருந்து நீ மீள முடியும்; துக்கத்தைத் தாண்டிச் செல்லலாம்; உலக வாழ்விற்கு அப்பாற்பட்ட நிலைக்குச் செல்லலாம். அதற்காக உன்னுடைய ஜீவ வியக்தியை அடியோடு துடைத்துவிடு. சிலுவை யில் அறையப்படுவது என்பதும் இதுவே. ஆணவத்தை முற்றிலும் அழித்து இருப்பதே இந்நிலையாகும். 'எனது ஜீவ வியக்தி முற்றி லும் அழிந்த பின் எஞ்சி நிற்பது என்ன?'— என்ற கேள்வியே அனாவசியம். அதைப்பற்றிக் கவலைப்பட யார் இருக்கின்றார்கள்? எனவே ஏன் அந்தக் கேள்வியைக் கிளப்புகின்றாய்?

ஆனந்தர் புத்தரிடம் கேட்டார்: ''ஆன்ம விடுதலைப்யைபற்றி அற்புதமான கருத்துக்களை நீங்கள் கூறி இருக்கின்றீர்கள். ஆனால் கட வுள் இருக்கின்றாரா இல்லையா என்று நிச்சய மாக எதுவும் பேசவில்லையே? தயவு கூர்ந்து உறுதியான கருத்தை எங்களுக்குச் சொல்லுங் கள்.'' புத்தர் வினவினர்: ''மரத்தில் உள்ள இலைகள் அதிகமா, கீழே விழுந்தவை அதி கமா?'' ''மரத்தில் தான் அதிகம்.'' அது போல்தான் நான் குறிப்பிட்டுஉபதேசித்ததும். நான் குறிப்பிடாது இருப்பது அதிகம்.''

புத்தர் கடவுளைப் பற்றி ஏன் பேசவில்லை? அவர் யாகத்தில் உயிர்ப்பலியை நிறுத்தவேண் டும் என்பதில் உறுதியாக இருந்தார். தேவர் களின் பெயரைச் சொல்லி மிருகங்கள் பலி யிடப்பட்டன. தேவர்களைப் பற்றியோ, கட வுளைப்பற்றியோ அவர் கருத்துத் தெரிவித் தால், அதை யாகத்திற்கும், யாகப் பலிக்கும் ஆதாரமாக எடுத்துக்கொள்வார்கள். அவர் மனித இனத்தை, உயிர் இனத்தை அன்பால் அரவணைத்தார். ''மிருகங்களை வதைப்பதின் மூலம் ஸ்வர்க்க இன்பம் பெற ஏன் துடிக்கின் றீர்கள்? ஸ்வர்க்கம் என்பது இல்லாமலே போகலாம். எனவே இல்லாத ஒன்றை அடைய, அங்கு இன்பத்தை அனுபவிக்க உயிர்க்கொலை செய்ய வேண்டுமா? உலக வாழ்வு நம் கைவசம் உள்ளது. இங்கே நன் முறையில் வாழ். சுயநலத்திற்காகக் கொலை செய்யாதே. துன்பத்தைச் சகித்து, ஜீவ பாவத்தைக் கடந்து செல்'' இதுவே புத்தரின் முக்கிய உபதேசம். இதில் கடவுளைப்பற்றிய பேச்சிற்கு இடமில்லை. புத்தர் சரித்திரத்தின் ஒரு காலகட்டத்தில் பிறந்தவர். வேத யாகங் களுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய வேண்டிய நிலை அவருடையது. அதற்கேற்ப உபதேசம் இருந்தது. கடவுளுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ அவர் பேசவில்லை.

ஹிந்து மதத்தில் ஆறுதர்சனங்கள் உள்ளன. அவற்றில் ஐந்து கடவுளைப்பற்றிப் பேசவே இல்லை. வேதாந்தத்தில் கூட கடவுளைப்பற் றிய விஷயத்தைத் தொடாமல், நல்ல முன் னேற்றம் காணலாம். எனவே இந்த அம்சத் திலும் புத்த மமுதம், ஹிந்து மதமும் ஒத்துப் போகின்றன. நம்முடைய சடங்குகளில் பெரும் பான்மை புத்தமதத்தினின்று வந்தவை. மஹா யான புத்தமதத்தின் கோவில் வழிபாடு, உற் சவங்கள் அப்படியே எடுக்கப்பட்டுள்ளன. 'புத்தமதம்' என்ற பெயர் மட்டும் ஒதுக்கப்பட் டது! பெயரைமட்டும் அகற்றிச், சாரத்தை வைத்துக்கொண்டனர். ஆச்சாரிய சங்கரரின்

அறிவுக்கூர்மையே இதற்குக் காரணம்!

கேள்வி: 6. ஒரே தத்துவத்தின் அடிப்படையில் பல மதங்களும் துவங்குகின்றன. கிரேக்க தத்துவம், மதத்திற்கு ஒரே பெயர் வழங்கப்பட்டது. வேதாந்தம் என்ற பெயரில் உங்களுக்கு உயர்ந்த தத்துவம் உள்ளது. எல்லா மதங்களும் ஒரு தத்துவத்தின் பல் வேறு விளக்கங்கள் என்று கூறலாமா?

பதில்: எல்லா மதங்களும் 'மனிதனின்' விளக்கமாக அமையலாம். சாஸ்திரங்களில் பெரியவன் மனிதனே! யேசுவோ, ஸ்ரீ கிருஷ்ணனோ அல்லர். நாம் அனைவரும் மிகப் பெரிய சாஸ்திரங்கள். ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது நமது நிர்வாண நிலை, பூரண உணர்வு பெற்ற நிலை. தூக்கம் என்ற அனுபவம் உனக்கும் எனக்கும் வேறுபட்டது அன்று. புத்தன், முஸ்லீம், ஹிந்து என்பவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் தங்களுடைய தனிப்பட்ட ஜீவ உணர்வை இழந்துவிடுகின்றனர். இது படைப்பு அனைத்திற்கும் பொருந்தும். சமாதி, நிர்வாணம், முழுமை—அனைத்தும் ஆழ்ந்த உறக்கத்திற்கு, சுஷுப்திக்குச் சமம். கனவற்ற உறக்கத்தின் மூலம் இந்த உண்மை நமக்குப் புகட்டப்படுகின்றது. நம்முடைய சொருபநிலை சுஷுப்தியின் மூலம் உணர்த்தப்படுகின்றது. எனவே நாம் அதை நாடுகின்றோம். விலங்கு, பறவை, மனிதன்—என்ற உயிரினங்களின் உறக்க அனுபவத்தில் பேதம் இல்லை. தங்களுடைய சொருபத்தில் நிலைத்து இருக்கும்போது, எந்த மதத்தையும் அவர்கள் சார்வது இல்லை. அனைவரும் பூரணப் பிரக்ஞையின் வசத்தில் இருக்கின்றனர்.

கேள்வி: 7. சமாதி என்ற நிலையைப்பற்றி ஜப்பானியர்கள் பேசுகின்றனர். நமக்கு அந்த அனுபவம் இல்லாது, அறியாமையில் மூழ்கி உள்ளோம். சமாதியைப்பற்றிய விளக்கத்தை எந்தத் தத்துவ நெறியில் காணலாம்?

பதில்: வெறும் தத்துவப் பேச்சை ஒதுக்கித் தள்ளுங்கள். நம் அனைவருக்கும் தரப்பட்டுள்ள வரப்பிரசாதம் கனவற்ற உறக்கம். அங்கு ஜப்பானியன், இந்தியன், ஐரோப்பியன் என்ற பேதம் கிடையாது. ஆழ்ந்த உறக்கத்தில் நாம் அனைவரும் அபேதத்தில்—வேற்றுமை அற்றநிலையில் இருக்கின்றோம். சமாதி, நிர்வாணம், ஆழ்ந்த உறக்கம்—இங்கே தனிப்பட்ட ஜீவவியக்திக்கு இடமே இல்லை. எனவே பெயரை வைத்துச் சச்சரவு செய்யாதீர்கள். நம் இருவருக்கும் இடையே எந்தவித வேற்றுமையும் இல்லாத நிலைக்கு நாம் செல்கின்றோம் என்பதே சத்தியம். விழிப்புநிலையில் வேறுபாடுகள் உள்ளன; சுஷுப்தியில் வேற்றுமைகிடையாது. அந்தச் சத்தியத்தை நீங்கள் அறியவேண்டும், அடையவேண்டும். ஒவ்வொருவரும் அந்நிலையை அடையத் தத்தமக்கு என மாறுபட்ட காலத்தை எடுத்துக்கொள்ளலாம். அதுவரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும். அகண்ட காலம் உங்கள் முன்னே உள்ளது; ஏதாவது ஒருநாள் உண்மையை நீ அறிவாய். ஒவ்வொருவருக்கும் ஏற்ற முறையில், பரிபாகம் அடைய வேண்டும் என்று ஹிந்து அனுமதி அளிக்கின்றான். நாம் அனைவருக்கும் ஏற்ற குறுக்கு வழியைக் காண்பிக்கின்றோம். ஆயின் கிறிஸ்துவன் தனது வழியே செல்லவேண்டும் என்றால், நமக்குத் தடையேதுமில்லை. கடைசியில் அனைவரும் அபேதத்திற்கு வந்துதான் தீரவேண்டும். வேற்றுமை அற்ற நிலையே நமது லட்சியம். சொருபநிலையில் நாம் எப்படி வேற்றுமை காணமுடியும்?

கேள்வி: 8. ஏசு கிறிஸ்து மறுபடியும் திரும்பி வருவார் என்று கிறிஸ்துவர்கள் கூறுகின்றனர். வேதாந்தம் என்ன கூறுகின்றது?

பதில்: ஒரு புதிய அவதாரமாக வருகின்றார் என்றால் சரி. சுவர்க்கத்தில் இருந்து ஆண்டவன் அவரை மறுபடியும் அனுப்பக் காத்திருக்கவில்லை. ஏசு கிறிஸ்து என்ற வடிவம் அழிந்து விட்டது; ஆயின் ஆத்மன் என்ற நிலையில் அவர் அகண்ட வஸ்துவிடம் ஐக்கியமடைந்துள்ளார். கடலில் ஒரு அலை எழுந்து அடங்குகின்றது; அது வேறு அலையாக உருவெடுக்கின்றது. அதுபோல்தான் அவதாரங்களும். இதுவே வேதாந்தத்தின் கொள்கை. ஒரு அலை அடித்து ஓய்ந்த பின் அடுத்த பேரலை எழுகின்றது. பழைய உருவத்தோடு ஸ்ரீகிருஷ்ணனோ, யேசுவோ திரும்பிவர மாட்டார்கள். ஆனால் சச்சிதானந்த சொருபிகளாய் வேறு வடிவில் தோன்றுவார்கள். சச்சிதானந்த நிலையில் அவர்கள் ஒன்றே, சரீரத்தால் அன்று. ஒரே மாதிரியான சரீரத்தோடு பலமுறை வருவது சலிப்பைத்தான் கொடுக்கும்!

இயேசு மறுமுறை வரமுடியும் என்றால், ஒவ்வொரு மாதமும் ஏன் வருகை புரியக் கூடாது? எதற்காக ஜெஹோவா என்பவரின் கட்டளைக்காகக் காத்திருக்க வேண்டும்? இன்றுவரை அவர் திரும்பி வரவில்லை என்பதின் மூலம், அவர் கிறிஸ்துவாகத் தொடர்ந்து இருக்கமுடியாது என்று நிருபணம் ஆகின்றது. நாங்கள் அதை நம்புவதில்லை. இது வெறும் மூடநம்பிக்கை.

கேள்வி : 9. சத்திய சாயி பாபா போன்ற ஆயிரக்கணக்கான அவதாரங்களைப் பற்றிய கருத்து யாது?

பதில் : காலம் தான் சத்தியத்தை உணர்த்தக்கூடிய முக்கிய அம்சம். போலிகள் அநேகர் இருக்கலாம். காலம் ஒன்றுதான் உண்மையையும், பொய்யையும் சரியாகப் பிரித்துக்காட்டும். எனவே காலத்திற்காகக் காத்திருங்கள். அது உண்மையை எடுத்துக்காட்டும். காலத்தால் அவதார புருஷன் களங்கப்படுவதில்லை; பொய் வேஷம் போடுபவன் அதை வெற்றி கொள்ள முடியாது!

கேள்வி: 10. இன்றுகூட அவதார புருஷர் உள்ளார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில் : நாம் அவதாரத்தைப்பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. எல்லா மனிதர்களுமே அவதார புருஷர்கள். பகவான் புத்தரின் உபதேசம் அதுவே. பரிணமித்து நீ முன்னேறி வா. உன்னுடைய ஜீவவியக்தியைத் துறந்துவிடு. அதன்பின் என்ன ஆகும் என்ற கவலைவேண்டாம். புத்தருடைய நெறியைப் பின்பற்றுங்கள்.

கேள்வி : 11. "நீ இறைவனின் ஆலயம்" என்று இயேசு கூறியுள்ளார்.

பதில் : "நீ இறைவனின் ஆலயம்; சொர்க்கத்தில் ஆண்டவன் போல் நீயும் நிறைவுடன் இரு" என்று கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார் : "கிறிஸ்து மதம் முழுவதும் அழியலாம். இயேசுவின் இந்த உபதேசம் இருந்தால் போதும். புத்துணர்வை அது அளிக்கும். இது அடிப்படையான வேதாந்த தத்துவம். இதையே இயேசு கூறியதால், நாம் அவரைப் போற்றுகிறோம். அவர் எதையும் அழிக்க வரவில்லை; மாறாக முழுமை அடையவே செய்தார். அவருடைய உபதேசமும், வேதாந்தமும் ஒன்று. அவருடைய வாழ்வு ஒரு சீரிய உதாரணம். வெறும் பேச்சுப் பேசாது வாழ்ந்து காட்டினார். அந்தச் சக்தி இன்றும் வேலை செய்கின்றது. அதுவே அவதார புருஷரின் அடையாளம். காலத்தால் அவர்களை அழிக்க இயலாது. ஏமாற்றுகின்றவர்கள் கண நேரத்தில் மறைவார்கள்; விண்மீனைப்போன்று அவதார மூர்த்தி பிரகாசிப்பார். கிறிஸ்துவின் உபதேசம் வார்த்தைகளால் கட்டுப்படுத்த ஒண்ணாதது. கிறிஸ்து சத்சித் ஆனந்த வடிவம்.

மேலை நாட்டினரின் போக்கு

உலகின் பல நாடுகளில், பல மதங்கள் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தோன்றிய போதிலும், அனைத்தும் ஆசியாக் கண்டத்தில் உற்பத்தி ஆயின. எனவே ஆசிய மக்கள் அனைத்து மதங்களையும் நன்கு அறிகின்றார்கள். தங்களுடைய தாய் நாட்டில் இருந்து புறத்தே வந்தவையும் தவறுகளுடன் சேர்ந்தன. கிறிஸ்துவ மதத்தின் மேலான கொள்கைகளை ஐரோப்பியர் புரிந்துகொள்ளவில்லை; பைபிள் பயன்படுத்திய உவமைகள், சொற்றொடர்கள் அவர்களுக்குப் புதிய மொழியாகத் தோன்றியது. மதோனாவின் சித்திரத்தை எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு சித்திரக் கலைஞனும் தன் மனம்போன படி வரைகின்றான். 'இறுதி உணவு' என்று நூற்றுக்கணக்கான சித்திரத்தைப் பார்த்துள்ளேன். மேஜையின் முன் யேசு இருப்பதாகவே வரைந்துள்ளனர். ஆனால் அவர் எப்போதும் மேஜையின் முன் உட்காரவில்லை; தரையில் அமர்ந்து, கையில் உள்ள குவளையில் ரொட்டியைத் தொட்டு உண்டார். வேற்று நாட்டு மனிதர்களின் பழக்கங்களைப் புரிந்துகொள்வது எந்த நாட்டிற்கும் கடினம். யூதர்களின் பழக்கங்களைப் புரிந்துகொள்ள ஐரோப்பியர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டனர்; அதிலும் பலநூற்றாண்டுகளாகமாற்றமும்,புதிய வடிவமும் பெற்ற பின்பு, கிரேக்க ரோமானிய போன்ற பல ஆதாரங்களைக்கொண்டு அது அறியப்பட வேண்டி இருந்தது. பல புராணக் கதைகள், மத நம்பிக்கைகளால் சூழப்பட்ட கிறிஸ்துவ மததைச் சரியாக உணராது அதன் பெருமையைச் சிறிதே அறிந்தனர் என்பதில் ஆச்சரியம் என்ன? எனவே கடையில் பண்டம் வாங்குவதைப் போன்ற ஒரு மதமாக அவர்கள் அதை வைத்திருந்ததில் வியப்பே இல்லை,

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[163 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உலகில் உள்ள போலீஸ் படைகளுள் லண்டன் போலீஸ்படை அலாதி சிறப்பு வாய்ந்தது என்று சொல்லுவார்கள். காந்தியவாதி அருணசலம் என்பவர் லண்டன் சென்றிருந்த பொழுது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டு காந்திஜி தங்கியிருந்த வீட்டைக் காண விரும்பினர். அவ்வீட்டின் விலாசத்தைப் போலிசாரிடம் காட்டி அங்கே போவதற்கு வழி கேட்டார். அந்தக் காவலர் ஒரு பஸ் எண்ணைக் கூறி அப்பஸ்ஸில் போய் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அவ்விடத்தில் இறங்கி அங்குள்ள போலிஸிடம்கேட்டால் மேற்கொண்டு வழிகாட்டுவார் என்று கூறினர். அவ் அன்பரும் அங்ஙனமே செய்தார். இரண்டாவது போலீஸ்காரர் "நீங்கள் அந்த இடத்திற்கு எதற்காகப் போகவேண்டும்?" எனக்கேட்டார். மகாத்மா காந்தி அங்குத் தங்கியிருந்ததால் அவ்விடத்தைப் பார்க்க விரும்புவதாக அன்பர் கூறினர். உடனே அவ்விரண்டாவது போலீஸ்காரர் மற்றெரு போலிஸ்காரரை வரவழைததுத் தன்னுடைய வேலையை அவரிடம் ஒப்படைதது விட்டு அவ் அன்பருடன் சென்று மகாத்மா தங்கியிருந்த வீட்டைக காட்டினர். இதைததான் நரயகஞம் என்று சொல்லவேணடும. நம் நாட்டில் உளள போலிஸ்காரர் இப்படி உதவி செய்வாரா என்பது சிந்திப்பதற்குரிய விஷயம்.

நமமால் மக்களுக்கு எனன உதவி செய்ய முடியுமோ அவ் உதவியைச் செய்வதற்கு நாம ஆயத்தமாக இருக்கவேண்டும். பிறருக்குப் பணிவிடை செய்ய நாம் ஆயத்தமாக இருக்குமளவு பூலோகத்தைச் சொர்க்கமாக மாறறி அமைக்கலாம். சுயநலத்தோடு இருப்பது விலங்கிலும் மோசமானது. பணிவிடை பண்ணுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கும் போது அதைச் சரியாகப் பயன்படுத்து மிடதது இறைவன் கொடுத்த வாய்ப்பை நாம் நன்கு பயன்படுத்தியவர் ஆகின்றோம். நாம் மேன்மை அடைவதற்கு அதுதான் உபாயம். பலர் தாங்கள் வாங்கும் சம்பளத்திற்கே வேலை செய்வதில்லை. லஞ்சம் வாங்காமல் வேலைசெய்வதில்லை என்ற நிலையிலும் இருக்கின்றார்கள். லஞ்சம் வாங்கும் பழக்கம் எல்லாப் படித்தரங்களிலும் வந்துவிட்டது. இது மிகவும் தவறானது. மனப்பான்மையில் கடைத்தரமானது. யக்ஞ பூமியில் இப்படி லஞ்சம் வாங்குவது வேதனைக்குரியது. பெறுகின்ற சம்பளத்திற்கு ஏற்றபடி உழைக்காவிட்டால் சம்பளத்தை அவன் ஜீரணம் செய்யமுடியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "பாதரசத்தையும் பாவத்தையும் மனிதனல் ஜீரணம் பண்ண முடியாது" நாம் உழைத்துச் சம்பாதிப்பது நம்மைவிட்டுப் போகாது. நாம் முறை தவறிச் சம்பாதிப்பது எவ்வளவு பாதுகாப்புச் செய்தாலும் அது நம்மை விட்டுப் போய்விடும். மனிதனுக்கு மனிதன் உள் அன்போடு பணிவிடை செய்யவேண்டும். அதை நர யக்ஞம் என்று சொல்லலாம்.

பஞ்சமஹா யக்ஞங்களுள் பூதயக்ஞம் என்பது ஒன்று. பூதம் என்பது இங்கு மனிதனைத் தவிர மற்ற உயிர்களைக் குறிககும். கால்நடைகள் நமககு நன்கு பயன்பட்டு வருகின்றன. அமெரிக்காப் போன்ற வெளி நாடுகளில் கால்நடைப்பண்ணைகள் சிறப்பாக இருக்கின்றன. ஆங்குள்ள பசுக்கள் நனகு கொழுதத மேனியுடன் வளர்கின்றன. நம் நாட்டில் பசுவை நாம் கோமாதாவாகக் கொண்டாடுகின்றோம். ஆனல் நாம் வளர்க்கும் பசுக்கள் எலும்பு தெரியுமாறு இளைத்துக் கிடக்கின்றன. நாம் வளர்க்கும் பசு உணவின்றித் திண்டாடுமானல் அது இருக்கும் வீடு விருத்தியாகாது. மனிதன் ஒருவன் வேலை செய்யாது ஏமாற்றலாம்; அறைகுறையாகச் செய்யலாம்; தனக்குத் தோன்றியதைச் செய்யலாம். ஆனல் கால்நடைகள் அப்படிச் செய்ய முடியாது. அவைகளைச் சித்திரவதை செய்கின்ற பாங்கில் நாம் நடந்து கொண்டால் அப்பாபத்திலிருந்து நாம் தப்ப முடியாது. நம்மை அண்டியுள்ள கால்நடைகளை நாம் பராமரித்து வரவேண்டும். எந்த உயிர்களையும் அனவசியமாக நாம் உபத்திரவப்படுத்தக் கூடாது. பயிர் பச்சைகளை

நாசமாக்கும் பூச்சிவகைகளைக் கொல்லலாம். நமக்குப் பயன்படுகின்ற உயிர்வகைகளைச் சித்திரவதை செய்யக்கூடாது. காக்கையை ஒத்த ஒருவகைப் பறவை ஆஸ்திரேலியாவில் இருக்கிறது. அது மக்களுக்குப் பெரிய உபத்திரவம் செய்து வந்தது. அந்நாட்டில் குடியேறிய வெள்ளைக்காரர்கள் அவற்றைக் கொன்று தள்ளினர்கள். அக்காக்கைகள் அழிந்துபோகவே பயிர்பச்சையில் ஒருவகைப் பூச்சி உற்பத்தி ஆயிற்று. அப்பூச்சியைப் போக்க வழி என்ன என்று ஆராய்ந்தார்கள். அப்பூச்சிகளை அது வரையிலும் தாங்கள் கொன்ற பறவைகள் தின்று அவை பரவா வண்ணம் செய்து வந்தன என்பது அவர்களுடைய ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. பிறகு அப்பறவைகளைக் கொண்டு வந்து வளர்க்க ஆரம்பித்தார்கள். அப்பறவைகள் விருத்தியானதும் பயிர் பச்சைகளைத் தாக்கி வந்த பூச்சிகளும் அழிந்துபோயின. இங்ஙனம் ஒவ்வோர் உயிரும் மற்ற உயிருக்குத் துணையாக இருப்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. நமக்குக் காகம் தோட்டியாக இருக்கிறது. நாம் எச்சில் பொருள்களாகப் போடுவதை எல்லாம் அது உண்டு சுத்தப்படுத்துகிறது. எனவே நாம் எல்லா உயிர்களிடமும் அன்பாக இருந்து பழகுதல் வேண்டும்.

பஞ்சமகாயக்ஞத்தில் ஒரு யக்ஞம் குறைபட்ட நிலையில் ஒரு காலத்தில் இருக்குமானல் அக்காலத்தில் தோன்றும் ஆச்சாரிய புருஷர் அதை வலியுறுத்துவார். ராமன் புத்திரோத்தமனக இருந்து பித்ரு யக்ஞம் என்ன பாங்கில் நிகழவேண்டுமென்பதை விளக்கிக் காட்டினர். சமுதாயத்தின் நடைமுறையில் நலத்தைப் பாதுகாக்கவும், கேட்டைத் துடைத்துத் தள்ளவும் கிருஷ்ண பரமாத்மா அவதரித்து வந்தார். உயிர்ப்பலி மிகுந்திருந்த காலத்தில் புத்தர் தோன்றினர். பிம்பிசார மன்னன் யாகம் ஒன்று செய்தான். அந்த யாகசாலையில் பலியிடுவதற்காக மந்தை ஆடுகள் ஓட்டிச் செல்லப்பட்டன. அம்மந்தையில் ஒரு தாய் ஆடு நொண்டி நொண்டி நடந்தது. அதன் குட்டி துள்ளிக் குதித்து அங்கும் இங்கும் ஓடியது. தாய் ஆடு பரிதாபகரமாகக் கத்தி குட்டியை அழைத்தது. இடையன் அந்த நொண்டி ஆட்டை அடித்து ஓட்டினன். ஆடு துன்பப்பட்டதைப் பார்த்த புத்தர் இடையனிடம் "இந்த ஆடுகளை எங்கே ஓட்டிக்கொண்டுபோகின்றாய்?" என்று கேட்டார். "பிம்பிசார மன்னனின் யாக சாலையில் பலியிடுவதற்காக ஓட்டிக்கொண்டு போகிறேன்" என்றான் இடையன். புத்தர் கருணையோடு நொண்டி ஆட்டிடம் பகர்ந்ததாவது: "நீ மரணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றாய். இது உனக்குத் தெரியாது. நீ நடக்க முடியாது சிரமப்படுகின்றாய். குட்டியைக் குறித்துக் கவலைப்படுகின்றாய். சிறிது நேரத்துக்காவது உன் துயரத்தை நீக்கி வைக்கிறேன்." இவ்வாறு கூறி அவர் குட்டியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டார். நொண்டி நொண்டி நடந்துகொண்டிருந்த ஆட்டின் அடிவயிற்றில் கையைக் கொடுத்து அது நடப்பதற்கு உதவி செய்தார். இங்ஙனம் யாக சாலைக்குள் நுழைந்த இவருடைய தோற்றப் பொலிவைக் கண்டதும் எல்லாரும் எழுந்து நின்றார்கள். புத்தர் யாக சாலையில் இருந்தவர்களைப் பார்த்துப் பகர்ந்ததாவது: "மனிதனைவிடச் சிற்றுயிர்களுக்கு உயிர்ப்பற்று அதிகம். இந்த ஆடுகளைப் பலிகொடுத்து நீங்கள் என்ன நலன் பெறப்போகிறீர்கள்?"

யாகம் செய்பவர்கள்: "இந்த யாகத்தில் பலியிடப்படும் உயிர் சிறுமை அடைவதில்லை. அந்த உயிர் பெருநிலையை அடைகிறது."

புத்தர்: "யாகத்தில் பலியிடப்படும் உயிர் பெரு நிலையை அடைகிறது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

யாகம் செய்பவர்கள்: "வேதத்தில் அங்ஙனம் சொல்லப்பட்டிருக்கிறது."

புத்தர்: "வேதத்தில் உங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கின்றதா?"

யாகம் செய்பவர்கள்: "வேதத்தில் நாங்கள் பூரண நம்பிக்கை வைத்திருக்கின்றோம்."

புத்தர்: "யாகத்தில் எந்த உயிரைப் பலி கொடுக்கும்படி வேதம் கூறுகிறது?"

யாகம் செய்பவர்கள் : "எந்த உயிரையும் பலிகொடுக்கலாம் என்று வேதம் கூறுகிறது."

புத்தர்: "நரமேத யக்ஞத்துக்கு இடமுண்டா?"

யாகம் செய்பவர்கள்: "அதற்கும் இட

முண்டு. மனிதனை யாகத்தில் பலியிட்டு ஆகுதியாகக்கொடுத்து விட்டால் அவன் பெரு நிலைக்குப் போகின்றான்."

புத்தர்: "உங்களுக்கு அதில் நம்பிக்கை உண்டா?"

சிறிது சந்தேகத்தோடு 'நம்பிக்கை உண்டு' என்று கூறினர்கள். புத்தர் சுற்று முற்றும் பார்த்தார். யாகத்துக்கு வந்திருந்தவர்கள் பலர் 'வீடு போ போ, காடு வா வா' என்கின்ற நிலையில் இருந்தனர். அவர்களுடைய வாழ்வு நரகவேதனையாக இருந்தது. அவர்களைப் பார்த்த பின் புத்தர் கூறியதாவது: "இங்குள்ள உங்கள் வயதான மூதாதையர்களை இந்த யாகத்தில் பலி கொடுத்தால் அவர்கள் சொர்க்கத்துக்குப் போவார்கள். அவர்களுக்கு இங்குள்ள வேதனையும் தீரும். வேதத்தில் நம்பிக்கையுள்ள நீங்கள் இதைச் செய்து காட்டுங்கள் பார்க்கலாம்?" "எங்களால் அதுமுடியாது" என்று அவர்கள்சொன்னார்கள். "நீங்கள் பொய் வேஷதாரிகள். இந்த ஆடுகளைப் பலிகொடுத்து நீங்கள் அடையும் பலன் என்ன?" என்று புத்தர் கேட்டார். "இந்த யாகத்தைச் செய்துமுடிப்பதால் நாங்கள் சொர்க்கத்துக்குச் சென்று இன்னின்ன இன்பங்களை எல்லாம் அனுபவிப்போம்" என்று ஜாபிதாக் கொடுத்தார்கள். "நீங்கள் கூறும் இந்த இன்பங்களை எல்லாம் இவ்வுலகத்திலேயே நான் அனுபவித்துப் பார்த்துவிட்டேன். இவை நித்தியமானவை அல்ல என்பதை நான் மனப்பூர்வமாக அறிந்திருக்கிறேன். எனவே என்னைப் பலியிட்டு இந்த யாகத்தைப் பூர்த்தி செய்து நீங்கள் யாவரும் நலன் அடையுங்கள்" என்றார் புத்தர். இதைக் கேட்டதும் எல்லாரும் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். யாகத்தை உடனே நிறுத்தினர்கள். யாகத்தில் உயிர்ப்பலியிடுவது அன்று முதல் நிறுத்தப்பட்டது. இப்பெருமை புத்தருக்கு உரியது. இது பூதயக்ஞம்.

இக்காலத்தில் மனிதனை மனிதன் கண்ணியப்படுத்தத் தெரியாதவனாக இருக்கின்றான். ராமகிருஷ்ணர் இக்குறையை நீக்க நரயக்ஞத்தைச் சிறப்பாகச் செய்தார். விவேகானந்தர் நாடு முழுவதும் பரிவ்ராஜகராகச் சுற்றிப் பார்த்த பின் பகர்ந்துள்ளதாவது: "பாமரர்களையும், பெண்களையும் புறக்கணித்ததன் விளைவாக நாடு வீழ்ச்சியுற்றது." பாமரரைத் தெய்வ சொரூபமாகப் பாராட்டும் ஆத்ம சாதனத்தை ராமகிருஷ்ணர் செய்துள்ளார். அவர் தீண்டாமையை ஒழிக்க முதலில் பாடுபட்டார். அக்காலத்தில் அந்தணர் ஒருவர் சேரிக்கு வந்தால் சேரிக்கே ஆபத்து என்கிற குருட்டு நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டி வைத்திருந்தார்கள். ஆகவே அவர் பகலில் சேரிக்குப் போவதற்குப் பதிலாக இரவில் சேரிக்குப் போய்த் தம் தலைமுடியால்சேரியைச் சுத்தப்படுத்தினர். "தாயே! இந்தச் சேரிவாழ் மக்கள் உம்முடைய குழந்தைகள். அவர்களுக்கு நான் பணிவிடை செய்யும் நல்ல மனப்பான்மையைத் தா" என்று பிரார்த்திப்பார். தாம் சாதனை செய்ததன் விளைவாக அம்பிகையின் சான்னித்தியத்தைச் சேரிவாழ் மக்களிடமும் கண்டார். அன்று அவர் விதைத்த விதை மகாத்மா காந்தியால் நாடு முழுவதும் பரவியது. இன்றைக்கு அது நல்ல வடிவெடுத்து வருகிறது.

பெண்பாலர் பாரமார்த்திகத்திற்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்து இடைக்காலத்தில் வந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்ரீ சாரதாதேவியாரைத் தெய்வ சொரூபமாக வைத்து வழிபட்டார். சாரதாதேவியாரை ஞானகுரு ஸ்தானத்துக்குக் கொண்டு வந்தார். மற்றவர்களைக் கீழ்மைப்படுத்தித் தங்களை உயர்ந்த நிலையில் வைக்க முயல்பவர்கள் கீழ்மை அடைவது திண்ணம். அதற்குமாறாக நரயக்ஞம் என்ன பாங்கில் நிகழவேண்டுமென்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜீவிதம் விளக்கிக் காட்டுகிறது.

நாம் பஞ்சமகா யக்ஞங்களையும் முறையாகச் செய்து வந்தால் வாழ்வாங்கு வாழ்கின்றவர்களாகின்றோம். தேவயக்ஞத்தின் மூலமாக இறைவழிபாட்டை முறையாகச் செய்தவர்களாகிறோம். ரிஷியக்ஞத்தின் மூலமாக மனதையும் வாக்கையும் திருத்தி அமைத்தவர்களாகின்றோம்.

மற்ற யக்ஞங்களின் மூலமாக உயிர்களோடு சரியான நல்லிணக்கம் வைத்தவர்களாகின்றோம். இவற்றின் மூலமாகப் பிரபஞ்ச வாழ்வில் சிறப்படைகின்றோம். பரத்துக்கும் தகுதியுடையவர்களாகின்றோம். இறைவன் அருளால் நாம் அனைவரும் தீவிரமான யக்ஞமூர்த்திகள் ஆவோமாக. (முற்றும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

விராட் புருஷனவர் முட்டை வடிவமான இப்பிரபஞ்சத்திலிருந்து — அண்டத்திலிருந்து வெளிப்பட்டதும் அவர் எழுந்து நின்றார். அவர் தனித்திருந்தார். தான் இருப்பதற்கு ஓர் இடம் தேடினர். அப்புனித மூர்த்தியின் பரிசுத்தவானின் விருப்பப்படி ஜலம் தோன்றியது. அவ் விஸ்வ மூர்த்திக்கு நர: என்றும் பெயர். அந்நரனிடமிருந்து தோன்றி வந்ததால் ஜலத்திற்கு நாரா என்ற பெயர் உண்டாயிற்று. தான் தோற்றுவித்த, தன்னிடத்திலிருந்து தோன்றின அந்த நீரிலேயே அவ்விராட் புருஷர் ஆயிரம் தேவ வருஷங்கள் வாழ்ந்ததால் அவருக்கு நாராயணன் (ஜலத்தில் வசிப்பவர்) என்ற பெயர் உண்டாயிற்று. இந்த ஸ்தூல பூதங்கள், கர்மம் (வினைப் பயன்) காலம், ஜட சேதனப்பொருள்களின்மாறி அமையும் தன்மை, வளர்ச்சி, பரிணமம், ஜீவர்கள் ஆகிய இவைகள் எல்லாம் என் ஆண்டவனின் அருளால் இச்சையால் நிலவி விளங்கி வருகின்றன. எப்போது அவனுக்கு இவைகளிடத்து உபேக்ஷை, உதாசீனம், புறக்கணிப்புதோன்றுகிறதோ அப்போது அவைகள் ஒன்றும் இருக்கமாட்டா. (குழந்தை உற்சாகத்துடன் விளையாடும்போது எல்லாப் பொம்மைகளும் உயிர் பெறுகின்றன. ஒரு பொம்மை ராஜா ஆகிறது. மற்றொன்று சேவகன் ஆகிறது. மண் சோறு ஆகிறது. பொம்மைக் கல்யாணம் நடக்கிறது. வயோதிகன் இறந்துவிட்டான். ஆ! எல்லாரும் அழுகிறார்கள். குழந்தை இவற்றை விரும்பாமல் உதறி உதைத்துத் தள்ளிவிட்டு அம்மாவிடம் ஓடிவிடுகிறது. அங்குப் பொம்மைகள் எல்லாம் யுத்தகளத்தில்உயிரற்ற குதிரை, வீரர், ரதம், ஆயுதங்கள் கிடப்பன போன்று கிடக்கின்றன. என் ஆண்டவனின் சிருஷ்டியும், சம்ஹாரமும் இப்படிப் பட்டவையே) தன் யோக நித்திரை, தூங்காத தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த என் ஆண்டவன் தன்னில் தானே இன்புற்றிருந்த என் ஆண்டவன், ஏகாந்தமாய் இருந்த என் ஆண்டவன் இப்போது தன் யோக மாயையால், அற்புத சக்தியால், பலவாக ஆக விருப்பம் கொண்டு தன் ஒளி மயமான வீரியத்தை மூன்றாகப் பகுத்தார். அதிதெய்வம், அத்யாத்மம், அதிபூதம் என்பனவாகப் பிரிந்தார். ஓ பரீக்ஷித், ஏகமாய் இருந்த புருஷன் எங்ஙனம் மூன்றாக ஆனார், வடிவெடுத்தார் என்பதை இனி கேள்.

அவ்விஸ்வ மூர்த்தி தன்னிடத்தில் வேகமான ஓர் இயக்கத்தை உண்டுபண்ணினர். அப்பொழுது அவர் சரீரத்தின் உள்ளே இருக்கிற ஆகாசத்திலிருந்து இந்திரிய தீக்ஷ்பண்யம்—ஓஜஸ், சஹோ—மன வலிமை, பலம் இம்மூன்றும் தோன்றின. இவைகளிலிருந்து வாயுக்களில் முக்கியமானதான பிராணன் தோன்றிவந்தது. ஓர் அரசனை அவனது சேவகர்கள் பின்பற்றியும் அனுசரித்தும், பணிந்தும் நடப்பது போன்று எல்லா ஜீவர்களிடத்தும் உள்ள எல்லா இந்திரியங்களும் பிராணன் இயங்கும்போது அவைகளும் இயங்குகின்றன. பிராணன் செயலற்று இருக்கும்போது இந்திரியங்களும் செயல்படமாட்டா. பிராணனின் செயல் தொடங்கியதும் அவ்விஸ்வ மூர்த்திக்குப் பசியும் தாகமும் எடுத்தன. சாப்பிடவும் பருகவும் எண்ணம் தோன்றியதும் அவ்விஸ்வ மூர்த்தியின் வடிவத்தில் வாய் என்கிற அங்கம், உறுப்பு தோன்றியது. வாயில் நாக்கு தோன்றியது. அதன் மூலம் ருசி அறிதல் என்கிற அறிவு தோன்றியது. அதன் பிறகு பலவிதமான ருசிகள் தோன்றின. (அவைகள் பொதுவாக அறுசுவை எனப்படுகின்றன. இனிப்பு என்றால் எத்தனைவித இனிப்புகள் உள்ளன! இனிப்பு சேரும் பொருளின் தன்மையை ஒட்டி இனிப்பின் தன்மைகளும் மாறுகின்றன) அந்த ருசிகளையெல்லாம் சுவை என்கிற அறிவு அனுபவித்து மகிழ்ந்தது. "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு." நாக்குக்கு, சுவை என்னும் அறிவுக்கு அதிதேவதையாக உள்ள கடவுளும் ருசிகளை எல்லாம் அனுபவித்தது. அந்த விஸ்வ மூர்த்திக்குப் பேசவேண்டும் என்கிற விருப்பம் தோன்றியது. அப்பொழுது அம்மூர்த்தியின்

வாயிலிருந்து அக்னிதேவன் தோன்றினன். பேசும் அங்கத்துக்கு அக்னியே அதிதேவதை. அக்னியுடன் சேர்ந்துபேசும் உறுப்பும் அதைப் பயன்படுத்திப் பேசுதலும் தோற்றத்துக்கு வந்தன. பேசும் கருவியோடு அதன் அதிதேவதையும் சேர்ந்து இருக்கும் போதுதான் பேசுதல் சாத்தியமாகிறது. தன் மூச்சை அடக்கிக் கொண்டு அவ்விஸ்வமூர்த்தி ஜலத்திற்குள்ளேயே வெகுகாலம் இருந்தார். அவரது மூச்சுக்காற்று வெளியேற முயன்றபோது அதன் அழுத்தத்தினுல் அம்முகத்தில் இரண்டு நாசித் துவாரங்கள் தோன்றின. நாற்றம்—வாசனை என்னும் அறிவை அவர் விரும்பிய போது அவரது மூக்கில் முகர்தல் அதை உணர்தல் என்கிற அறிவும் அதற்கு அதிதேவதையாம் வாயு பகவானும் அவ்விஸ்வமூர்த்தியின் மூக்கில் தோன்றினர். முகர்தல் என்னும் அறிவுக்கு அதிதேவதை வாயு ஆகிருர். அந்த வாசனையை ஏற்றுப் பரவச் செய்கிறவர் அவரே. எங்கும் ஒரே காரிருள் சூழ்ந்திருந்தது. அவ்விஸ்வமூர்த்தி தன்னையும் சுற்றுப்புறப் பொருள்களையும் பார்க்க விரும்பினர். அப்பொழுது சூரிய பகவானும் இரண்டு கண்களும் அம்மூர்த்தியிடம் தோன்றின. பார்த்தல் என்னும் அறிவுக்குச் சூரியனே அதிதேவதை. ஏழு வர்ணங்கள் தோன்றின. ஏழு வர்ணங்கள், பார்த்தல் என்னும் அறிவு இவைகளுக்குச் சூரியனே அதிதேவதை. வேதங்கள் அவ்விஸ்வமூர்த்தியின் திருப்புகழை, மகிமையைப் பாடல்களால் பாடித் துதிக்க விரும்பின, பள்ளி எழுச்சி பாடித் துயில் எழுப்ப விரும்பின, முற்பட்டன. அத்திவ்விய பிரபந்தத்தைக் கேட்டு மகிழ அம்மூர்த்தியும் விரும்பினர். இந்த விருப்பத்தின், ஆசையின் பேரில் அவரிடத்து இரண்டு காதுகள் தோன்றின. அத்துடன் அவைகளின் தெய்வங்களாகிய திக்தேவதைகளும் தோன்றினர். நான்கு திசைக்கும் அவர்களே பரிபாலகர்கள். கேட்டல் அல்லது ஓசை அறிவுக்கும் தெய்வமாகிருர்கள். இதன் மூலம் கேட்டல் சாத்தியமாயிற்று. அம்மூர்த்திக்கு மென்மை, கடினம், கனம், லேசானது கதகதப்பு, குளிர் ஆகிய பிறபொருள்களின் தன்மையை உணர வேண்டுமென விருப்பம் உண்டாயிற்று. அப்போது அம்மூர்த்தியிடத்துத் தோல்—சருமம் தோன்றலாயிற்று. அதுவே உணர்தலுக்கு இருப்பிடமாகும். சருமத்தில் ரோமங்களும் தோன்றின. ஸ்தாவர வர்க்கம் இந்த ரோமத்துக்குத் தெய்வம் ஆகிறது. வாயுபகவான் தொட்டுணர்தலுக்குத் தெய்வம் ஆகிருர். உள்ளும் புறமும் சருமம் எங்கும் வாயு வியாபித்திருக்கிருர். தொட்டுணர்தல் என்னும் அறிவு வியாபித்துள்ளது. இதனுல் ஸ்பர்சம் தொட்டுணர்தல் சாத்தியமாயிற்று. இங்ஙனம் ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோற்றத்துக்கு வந்தன.

விஸ்வமூர்த்திச்குப் பல்வேறு காரியங்கள், செயல்கள் யக்ஞங்கள் செய்ய விருப்பம் உண்டாயிற்று. இந்த விருப்பத்தின் விளைவாக அவரிடத்து இரண்டு கரங்கள் தோன்றின. இந்தக் கரங்களிடத்துப்பொருள்களைப் பற்றிப் பிடிக்கும் தன்மை, அமைப்பு ஏற்பட்டது. கரங்களுக்கு, கரங்களின் தன்மைக்குத் தலைவன், கர்த்தா இந்திரன். இதனுல் கரங்கள் செயல்பட ஆரம்பித்தன. அவ்விராட் புருஷன் நடக்க விருப்பம்கொண்டார். அவர்விருப்பப்படியே அவரிடத்துக் கால்களும் அவைகளின் தெய்வம் விஷ்ணு தேவரும், நடமாடும் இயல்பும் தோன்றலாயின. இதனுல் விஸ்வமூர்த்தியின் செயல்படும் தன்மை அதிகமாயிற்று. அவரால் யக்ஞங்களை நன்கு செய்ய முடிந்தது. பிறகு அம்மூர்த்தியானவர் தனக்குச் சந்ததி வேண்டும், இல்லற இன்பம் வேண்டும் எனப் பெருவிருப்பம் கொண்டார். அவரிடத்து ஆண்குறியும், புணர்தலும், பிரஜாபதியும் தோன்றினர். அதனுல் அவருக்கு அவ்வின்பத்தை அனுபவித்தல்சாத்தியமாயிற்று. பிறகு ஜீவகோடிகளின் தொகை வடிவமாகிய விஸ்வமூர்த்திக்கு மலம் கழிக்க வேண்டும்போல் தோன்றியது. அவரது விருப்பப்படியே மலம் கழிக்கும் ஆசன உறுப்பும், மித்திர தேவதையும், வெளியேற்றும் சக்தியும் உண்டாயின. அதன் பிறகு வேண்டாதபொருள்களை மலமாகக்கழிக்க இயன்றது. அப்பேருயிர்ப் பொருள் ஒரு சரீரத்திலிருந்து மற்றெரு சரீரத்துக்குப் போக நினைத்தது. பழைய சரீரத்தை இங்ஙனம் ஒதுக்க, புறக்கணிக்க எண்ணம் தோன்றியதும் அவ்விஸ்வமூர்த்தியின் சரீரத்தில் தொப்புள் தோன்றியது. அதிலிருந்து அபா

னன் என்கிற வாயுவும் மரணக்கடவுள் ஆகிய யமதேவரும் தோன்றினர். அபான வாயுவின் அதிதேவதை யமதர்மராஜன். முடிவில் பிரா ணன் அபானனிலிருந்து பிரிந்துகொண்டது. மரணம் சம்பவித்தது. இதுநாள்வரை கொண் டாடிய சரீரம் விழுந்தது.

விஸ்வமூர்த்திக்கு உண்ணவும் பருகவும் எண்ணம் தோன்றியபோது அவரது சரீரத் தில் குடல், அடிவயிறு, நாடி நரம்புகள், ரத்தக் குழாய்கள் தோன்றின. குடலுக்கு அதிதேவதை யான சமுத்திரராஜனும், ரத்தக்குழாய்களுக்கு அதிதேவதையான நதிகளும், திருப்தியும் சரீர போஷணை, சரீர இயக்கம், நிலைத்திருப்பதற்கு வேண்டிய சத்தும் தோன்றின. அந்த விஸ்வ மூர்த்திக்குத் தன்னிடம் தோன்றிய அனைத்தை யும், தன் மாயா சக்தியையும் பற்றித் தியா னிக்க, அறிய அவா எழுந்தது. அப்பொழுது அவரிடத்து ஹிருதயமும், மனதும் தோன்றின. அத்துடன் மனதின் தேவதையான சந்திரனும் தோன்றினன். மனதின் செயல்களான உணர் தல், அறிதல், சங்கல்பவிகல்பம், ஆசைப்படு தல் இவைகளும் தோன்றின. பிருதிவி, அப்பு, தேயு ஆகிய மூன்று பூதங்களிலிருந்து விஸ்வ மூர்த்தியின் சரீரக்கூறுகளாகிய தடித்தவெளித் தோல், மெல்லிய உள்தோல், சதை, ரத்தம், கொழுப்பு, மஜ்ஜை, எலும்பு ஆகிய ஏழு பொருள்களும் உண்டாக்கப்பட்டன. அதே போல ஆகாசம், நீர், வாயு இம்முன்றிலி ருந்து பிராணவாயுவும் தோன்றின, உண் டாக்கப்பட்டன. பார்த்தல், கேட்டல், முகர் தல், ருசித்தல், ஸ்பர்சம் ஆகிய அறிவுகள் எல் லாம் அந்தந்தப் பொருள்கள் பேரில் சென்றன, பிரயோகிக்கப்பட்டன, அறியப்பட்டன. அப் பொருள்கள் யாவும் அகங்கார தத்துவத்தி லிருந்து தோன்றியவைகள். பஞ்சபூதங்களும் அகங்கார தத்துவத்திலிருந்து வந்தவைகள். மனது சர்வவிகாராத்மா—ஓயாது மாறுபடும் தன்மையது. பொருந்தியது, பொருந்தாதது ஆகிய எல்லாவற்றையும் நாடுதல் அதன் இயல்பு. புத்தி தெளிவை உண்டாக்குகிறது, நல்லது கெட்டதைக் காட்டித் தருகிறது. குண தோஷங்களை உள்ளபடி விளக்குகிறது. அன் புள்ள அரசனே! ஆண்டவனின் ஸ்தூல சரீ ரத்தை இங்ஙனம் உனக்கு விளக்கப்படுகிறது.

அந்த விஸ்வ மூர்த்தியின் சரீரம் வெளியில் பஞ்ச பூதங்கள், அகங்கார தத்துவம், மஹத் தத்துவம் (விராட் புருஷனின் பேரறிவு) பிர கிருதி ஆகிய எட்டுக் கோசங்களால், உறை களால், போர்வையால் மூடப்பட்டிருக்கிறது. இதற்கு அப்பாற்பட்டதாக என் ஆண்டவன் இருக்கிறான். அது அதிசூக்ஷ்மமானது. அது தோற்றத்துக்கு வராதது, ஆதி அந்தமற்றது, என்றுமுள்ளது, சாஸ்வதமானது மனோவாக் குக்கும் எட்டாதது, அப்பாற்பட்டது. இந்த ஸ்தூல சூக்ஷ்ம வடிவங்கள் இரண் டுமே ஆண்டவனின் மாயையின் சிருஷ்டி யாகும். ஆகவே முனிவர்கள் இவ்விரண்டு வடிவங்களையும் வழிபடுவதில்லை. பரம் பொருள் உண்மையில் எந்தச் செயலும், மாறு தலும் அற்றவர். அவருடைய மாயையில் அவர் செயல் புரிபவர் ஆகிறார். பிரம்மாவின் வடி வெடுத்து நாத ரூபமாகவும் பதார்த்த ரூபமாக வும் ஆகிறார். பல கோடி நாம ரூபங்களையும் ஏற்கிறார், கர்ம சொரூபமாக ஆகிறார். பிரஜா பதிகள், மனுக்கள், தேவதேவதைகள், ரிஷி கள், பல வகை மிருக வகைகள், சித்தர்கள், சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், அசுரர்கள், குஹ்யகர்கள், கின்னரர், அப்ஸரர், நாகர்கள், கிம்புருஷர்கள், பாம்பு வகைகள் மரங்கள், புல், பூண்டு, பறவைகள், மலைகள், ஊர்வன, எல்லாம் என் ஆண்டவனே. இத் தனையாகவும் வடிவெடுத்திருப்பவன் என் ஆண்டவனே. சேதன, அசேதன உயிர்கள், நால்வகை பிறப்புகள், பூமி, ஆகாயம், நீர் இவைகளில் வாழ்பவைகள் அவைகள் நல்ல வையாகவோ, கொடியவையாகவோ இரண்டும் கலந்தவையாகவோ இருப்பது எல்லாம் மற்ற ஜீவர்களின் அவரவர் பழவினைப்பயனாக வந்த மைகிறது. சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக் குணங்களில் எது பிரதானமாகத் தலைதூக்கிச் செயல்படுகிறதோ அதற்கு ஏற்ற தேவ, மானுட, விலங்கு, ஸ்தாவர பிறவி வந்து வாய்க்கிறது. இந்த மூன்று குணங்களும் கலந்திருப்பதால் முன்று மூன்றாகப் பிரித்துப் பேசுவதும் உண்டு. பிரகிருதி முக்குண மய மானது. ஒரு குணத்தில் மற்றக் குணங்களும் சேர்வதால் பல குணங்கள் பல பேதங்கள் உண்டாகின்றன. ஸ்திதியின் கர்த்தாவாகத்,

தெய்வமாக விஷ்ணுவானவர் உள்ளார். எல்லா நலன்களும் அடங்கின மூர்த்தியாக உலகை அவர் காத்து வருகிறார். அவ்வப் பொழுது தேவ, மானுட, விலங்கு வடிவங்களி லும் தோன்றி வந்து உலகைச் சம்ரக்ஷிக்கிறார். உலகிற்கு ஓய்வுதரும் வேளைவரும் போது என் ஆண்டவனே ருத்திரனாகச் சம்ஹார மூர்த்தி யாக வடிவெடுத்து ஊழித்தீ மூலம் யாவற்றை யும் ஒடுக்கிவிடுகிறார். பெருங்காற்றில் மேகக் கூட்டம் சிதறி ஓடிவிடுவது போன்று இவ் அகண்ட உலகம் அவ்யக்த நிலைக்குத் தோன்றா நிலைக்குப் போய் விடுகிறது. தானே கட்டின வீட்டைக் குழந்தை மகிழ்ச்சியோடு காலால் கலைத்து விடுவதுபோன்று என் பிரபு, தீராத விளையாட்டுப்பிள்ளை, ஆனந்தக் கூத்தன் தானே விண்ணாகி,மண்ணாகி,உயிராகித் தானே தனக்குள் அனைத்தையும் ஒடுக்கிக்கொள்கிறான்.

ஆண்டவன் அளப்பரிய, எண்ணுதற்கரிய ஆற்றல், சக்தி உடையவர். அத்தகையவரை எல்லைக்குட்படுத்திச் சிருஷ்டி கர்த்தா, ஸ்திதி, ரக்ஷண்ய மூர்த்தி சம்ஹாரமூர்த்தியாக மேலே கண்டவாறு விளக்கிச் சொல்லுக்கு மனதுக்கு உட்படுத்தியாயிற்று. அறிவுள்ளவர்கள் இவ் விளக்கங்களின் குறைபாட்டை அறிவார்கள். அதற்கு எவ்வளவு மதிப்புத் தரவேண்டும் என் பதையும் அறிவார்கள். என் பிரபு, ஆண்டவன் விளக்கங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன். அவனுக்குச் செயல் ஏதும் இல்லை, கர்த்ருத்வம் இல்லை. நமது சாஸ்திரங்கள் ஆண்டவன் பேரில் இங்ஙனம் எல்லாம் ஏற்றிச் சொல்வது அவ ரது மேலாம் நிலையை விளக்குதல் பொருட்டே யாம். பரிணாமம், கர்மம், கர்த்ருத்வம், தோன்று தல், ஒடுங்குதல் எல்லாம் மாயையால் ஆண்டவன் பேரில் ஆரோபிக்கப்படுகின்றன. ஆண்டவன் இருப்பதால் தான் அவைகள் தோன்றுகின்றன. ஜால வித்தைக்காரன் தான் மெய்யானவன். அவனது ஜாலம் எல்லாம் பொய்,வெறும் தோற்றம்.நான் உனக்குக் கற்ப காலத்தைப்பற்றிச் சொன்னேன். பிரமமதேவர் தோன்றும் போது ஏற்படும் சிருஷ்டி முதல் அவர் கிரமமுக்தி அடைகிறவரை உள்ளகாலம் மஹாகல்பம் எனப்படுகிறது. இதற்கிடை யில் பிரம்மதேவரின் இராக்காலத்தில் அவர் தூங்குகிறபோது ஒரு முறை ஒடுங்கியும், விழிக்கிறபோது மறுபடி தோற்றத்துக்கு வரு வதுமாக உள்ள கால அளவையைக் கற்பகாலம் என்கிறார்கள். சிருஷ்டிக்கிரமம் எல்லாக் கற் பங்களிலும் ஒரே விதமானது தான். நாம் தூங்கி எழுந்திருக்கும்போது அதே சரீரத்தில் விழிக்கிறோம். மரணத்திற்குப் பிறகு வேறு சரீரத்தில் பிறப்பெடுக்கிறோம். அதேபோன்று கற்பமுடிவில் ஜீவர்களின் சரீரங்கள் மட் டும் புதுப்பிக்கப்படுகின்றன. மஹாகல்பத்தின் துவக்கத்தில் சிருஷ்டி புத்தம் புதியதாக ஆரம் பிக்கிறது. பழைய வீட்டை இடித்துத் தள்ளி விட்டுப் புது வரைபடம் போட்டுப் புதிதாகக் கட்டுவது போன்றது அது. இந்த வேறுபாட் டைத்தவிரசிருஷ்டிக்கிரமம் ஒரேமாதிரியானது தான். கல்ப காலங்களின் கால அளவைகளைப் பின்னால் உனக்கு விளக்குகிறேன். இப்போது பத்மகல்பத்தின் வரலாற்றைக் கேட்பாயாக.

சௌனகர் சொன்னார்: சூதரே! தாங்கள் முன்பு பாகவதர்களில் மிக உத்தமமானவரான விதுரர் தம் உயிரான பந்து மித்திரர்களை எல் லாம் விட்டுவிட்டு க்ஷேத்ராடனத்துக்காகக் கால்நடையாகவே புறப்பட்டதாகச் சொன்னீர் கள். அவர் தம் யாத்திரையில் மைத்ரேய ரிஷி யைச் சந்தித்து உயர்ந்த ஆத்மீக,தெய்வீகவிஷ யங்களைச் சம்பாஷித்தார்கள் என்று சொன் னீர்கள். இவ்விருவரும் உயர்ந்த பாத்திரங்கள். விதுரருக்குமைத்ரேயர்போதித்த உண்மைகளை எல்லாம் எங்களுக்குச் சொல்வீர்களாக. விதுர ருடைய கதையை மீண்டும் சொல்வீர்களாக. அவர் ஏன் பந்துக்களைப் பிரிந்தார், பிறகு யாத் திரையினின்று ஏன் திரும்பி வந்தார்? இவ் விஷயங்களை எல்லாம்தேவரீர் சொல்லுவீராக.

சூதர் சொன்னது:—ராஜா பரீக்ஷித்தும் இதே கேள்வியைக் கேட்டார். சுகதேவர் அவ் வரசனுக்குச் சொன்ன விடையை அப்படியே நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இரண்டாவது ஸ்கந்தம் முற்றும்.

ஒருசமயம் ராதாகிருஷ்ணன் விக்ரகத்தி லிருந்து ஒளிகிளம்பிவந்து தம் ஹிருதயத்தை யும், பாகவதப் புத்தகத்தையும் இணைப்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டார். அந்த ஞானக் காட்சியிலிருந்து பகவான், பக்தன், பாகவதம் மூன்றும் ஒன்று என்பதை அறிந்தார். பாக வதத்தின் மகிமை அத்தகையது.

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[160 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போர் வீரனுக்கு மன்னன் காட்டும் மரியாதை

ரஷிய தேசத்து நிகழ்ச்சி ஒன்றை ஆங்கிலக் கவிஞன் ஒருவன் சித்தரிக்கின்றான். ரஷிய தேசத்து மன்னனுக்கு ஜார் என்னும் பட்டப் பெயர் உண்டு. கடுமையான குளிர்காலத்தில் ஒரு நாள் ரஷியாவின் தலைநகராகிய மாஸ் கோவில் ஜன நடமாட்டம் நிறைந்த வீதியின் வழியே அரசன் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது அவனிடம் ஆயுதமோ பாதுகாப் பாளரோ இல்லை. மக்கள் அரசனைப் பார்த்த தும் 'மன்னன் வாழ்க' என்று போற்றினர்.

அதே தெருவில் நிகழ்ந்த மற்றொரு காட்சி யையும் கவஞன் வர்ணிககின்றான். சவ வண்டி ஒன்று அத்தெருவில் போய்க்கொண் டிருந்தது. அக்காட்சி துன்பமயமாக இருந்தது. நடை தளர்ந்த மனிதன் ஒருவன் அலங்காரமோ, ஆடம்பரமோ இல்லாத வண்டி ஒனறைப்பனிக் கட்டியின் மீது இழுத்துக்கொண்டு சென்றான். அவ்வண்டியின் மீது கரடு முரடான ஒரு சவப் பெட்டி இருந்தது. அதில் ஓர் ஏழையின் சவம் வைக்கப்பட்டிருந்தது. பனியும் குளிர் காற்றும் வேகமாய் வீசின. அந்நேரத்தில் அந் தத தள்ளாத மனிதன் அந்தச் சவ வண்டியை முதுகை வளைத்து மூச்சுத் திணற இழுத்துக் கொண்டிருந்தான்.

மன்னன் இக்காட்சியைக் கண்டதும் நின் றான். வண்டியை இழுத்துச் சென்ற மனித னைத் தன் பக்கத்தில் வரும்படி அழைத்தான். "நீ மயானத்துக்கு இழுததுச் செல்லும் இவ் வண்டியில் உள்ளவன் யார்?" என்று அரசன் அம்மனிதனைக் கேட்டான். "அது ஓர் ஏழை யின் சடலம். ஒரு சாதாரண வீரனின சவம்" என்று அம்மனிதன் சுருக்கமாகப் பதில் கூறினன்.

"சாதாரண வீரன?" என்று மன்னன் சிந்தனை யில் மூழ்கினன். நாடடுககு உயிர்கொடுத்த உத் தமனை அவன் ஏழையாக இருக்கலாம். ஆனல் அவன் ஒரு சுதத வீரன். அததகைய வீரன் கௌரவிக்கப்பட வேண்டும். கௌரவிக்கப் படாது அவன் சடலம் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படலாகாது. "நீ வண்டியை இழுத்துச் செல். அவனைக் கௌரவிக்க நான் பின் தொடருகின்றேன்" என்று கூறி அந்த வீரனுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அரசன் தலை யிலுள்ள தொப்பியை எடுத்துவிட்டுத் தலை குனிந்து மௌனமாக அஞ்சலி செலுத்தினன். பிறகு அந்த ரஷிய மன்னன் மெதுவாக அடி யெடுத்து வைத்து வண்டியைப் பின் தொடர்ந் தான். மெதுவாக அந்த வண்டி பனிபடர்ந்த வீதிகளில் மேலும் இழுத்துச் செல்லப்பட்டது. மன்னன் பின் தொடர்ந்து செல்ல சவ வண்டி இழுத்துச் செல்லப்படும் காட்சியை வீதியில் சென்று கொண்டிருந்த மக்கள் பார்த்து ஆச்ச ரியப்பட்டார்கள். அவர்களும் அரசனைப் பின் தொடர்ந்து நடக்கலானர்கள். விவசாயிகளும் இளவரசர்களும், கலைஞர்களும், கணக்கர்களும் அவ்வூர்வலததில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் கல்லறையை நெருங்க நெருங்கக் கூட்டம் பெருகிக்கொண்டே வந்தது. உற வினர் என்று ஒருவரும் இல்லாத அந்த வீரனை முடிவில் ஆயிரககணக்கான மக்கள் சூழ்ந்து நின்றார்கள். அவர்களெல்லாரும் மன்னனல் வழி நடத்திச்செல்லப்பட்டவர்கள். மன்னன் நன்றி உணர்வோடு அந்த ஏழை வீரனை வீர னுக்குரிய முறையில் இறுதி அஞ்சலி செலுத் திக் கௌரவித்தான். நாட்டுக்காக உயிர் துறந்த வீரனை மன்னன் அநாதையாகப் போகவிடவில்லை. நாட்டு மக்கள் திரண்டு அவனுக்கு அஞ்சலி செலுத்தும்படி அரசனே முன்னின்று வழிகாட்டினன். 'அரசன் எவ் வழி குடிகள் அவ்வழி' என்பது கோட்பாடு. பொறுப்புள்ள மன்னன் தன் கடமையைச் செய்யத் தவறமாட்டான். ஏழைப் போர் வீர ஞனுலும் அவனுக்குக் காட்ட வேண்டிய மரி யாதையை மன்னன் காட்டியது மக்களுக்குப் பாடமாக இருந்தது. நாட்டுக்கு உயிர் கொடுத்த வீரனுககு மரியாதை செலுத்துவது நாட்டு மக்களின் கடமையல்லவா? இதைத் தான் இக்கவிதையில் கவிஞன் வலியுறுத்து கின்றான்.

குறிப்புகள்

பதின்மூன்றும் பாத யாத்திரை

நோக்கம்: வருடம் முழுவதும் பொருள் ஈட்டுவதிலேயே கவனமும் கருத்தும் செலுத்துவது மனித இயல்பு. வருடத்தில் ஐந்து நாட்களேனும் அருள் நாட்டத்தில் ஈடுபட்டுத் தத்தம் லௌகீகக் காரியங்களை மறந்து ஆன்மீகத் திருப்பணிகளில் அன்பர்கள் முழுமனத்துடன் சிந்தை செலுத்த வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தோடு பாதயாத்திரை வருடந் தோறும் கோடையில் நடாத்தப்பெற்று வருகிறது. தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் இதில் கலந்து கொண்டு பெரும் பயன் பெறுகிறார்கள். தனி வாழ்க்கையில் தமக்கு இருக்கும் வசதிகள், தேவைகள் அனைத்தையும் இந்த ஐந்து நாட்களில் மறந்திருந்து ஒரே குழுவினராக ஒருவரோடு ஒருவர் இணக்கம் வைதது்ப் பழகியும், வைகறையில் உறக்கம் விழித்தது முதல் இரவு உறங்கச் செல்லும் வரையில் கடவுளைப் பற்றிய எண்ணங்களிலேயே கருத்தைச் செலுத்தியும், இயன்றவரையில் இயற்கையோடு இணைந்த எளிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றியும், ஆங்காங்கு உள்ள ஊர்களில் இறைவனின் திருநாமங்களை ஒலித்து ஆன்மீக விழிப்பை ஏற்படுத்தியும் தங்களைத் தாங்களே திருத்திக் கொண்டு உய்வு பெறுவதே இப்பாத யாத்திரையின் நோக்கமாகும்.

செயல் முறை: நாள்தோறும் அன்பர்கள் வைகறைத் துயில் எழுந்து குளித்து நீறுதரித்துத்திருப்பள்ளியெழுச்சிபாடுவார்கள். பின்னர் ஏற்கெனவே திட்டமசெய்துள்ளபடி அன்றன்று நடக்கவேண்டிய தூரத்தை ஒரே குழுவினராக நாமஜபம் செய்தவாறு கடந்து செல்வார்கள். பாத யாத்திரையில் ஆலய வழிபாடு, உழவாரத் திருப்பணி, ஊர் மக்களோடு சேர்ந்து நாமஜபம், பஜனை செய்தல், ஏழைகளுக்கு உதவிகள் செய்தல், அவர்களுடைய குடியிருப்புகளைத் துப்புரவு செய்தல், அவர்களுக்கு அன்னம், வஸ்திரம் ஆகியன அளித்தல், இயன்ற இடங்களில் ஐக்கிய வணக்க நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பணிகள் நிகழும். நெடுஞ்சாலைகளிலும், ஊருக்குள் வீதிகளிலும் செல்லும் போது நாமஜபம் செய்தல் மரபு. வீண்பேச்சுக்கு எங்கும் இடமில்லை.

அன்பர்கள் தூய வெள்ளையுடை அணிந்து வரிசைக்கு நால்வராகச் செல்வார்கள். புனிதமும், தூய்மையும், சேவையும் இப்பாத யாத்திரையின் முக்கிய நோக்கங்களாகும். குழுவை விட்டுப் பிரிந்து தனியே சென்று எவரும் உணவு, பானம் என்று எதுவும் ஏற்பதில்லை. இது ஓர் உல்லாசப் பயணம் என்ற எண்ணத்துடன் அன்றி இது ஒரு தெய்வத்திருத் தொண்டு என்ற தூய சிந்தனையுடன் பக்தியே வடிவெடுத்தவர்களாக அனைவரும் ஒழுகுதல் மரபு. இந்த நடைமுறைகளைப் பின்பற்ற இயலாதவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளப் பெறுவதில்லை.

இம்முறை பாத யாத்திரையில் 74 பேர்கள் கலந்து கொண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் முதல் காஞ்சிபுரம் வரை 60 கி. மீ. தூரம் வழி நடைப்பயணம் செய்தார்கள். வழியில் நெமிலி, செங்கல்பட்டு, ஆத்தூர், பழைய சீவரம், திருமுக்கூடல், வாலாஜாபாத், அய்யம்பேட்டை, சின்னக் காஞ்சிபுரம், பெரிய காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

முதல் நாள்: இம்முறை ஒரு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுப் பெரும்பாலான அன்பர்கள் தபோவனத்திற்கே வந்து ஆன்றோரின் அருளாசிகளுடனே யாத்திரையைத் துவக்க வாய்ப்பு ஏற்பட்டது. அன்பர்கள் 4—5—85 சனிக்கிழமை யன்று இரவு உணவுக்குப் பின் 8-00 மணிக்கு "ஜெய் ஸ்ரீ குருமஹராஜிகி ஜெய்" என்ற ஜெயகோஷத்துடன் திருப்பராய்த்துறையிலிருந்து பேருந்தில் கிளம்பினர்கள். 9-45 மணிக்கு எறையூர் சேர்ந்து அங்குத் தபோவனம் நடத்திவரும் பள்ளியில் இரவு தங்கினர்கள்.

மறுநாள் 5—5—85 ஞாயிறு காலை 3-00 மணிக்குத் துயில் எழுந்து குளித்து முடித்துப் பேருந்தில் பயணம் செய்து 9-30 மணியளவில் திருக்கழுக்குன்றம் அடைந்தார்கள். அங்கு காலை உணவு முடித்துச் சரியாகப் பத்து

மணிக்குச் சிவநாமம் சொல்லிக்கொண்டே திரு வீதி வலம் சென்று கடும் வெய்யிலில் மலை யேறிச் சென்று ஸ்ரீ வேதகிரீஸ்வரர், அருள் மிகுதிரிபுரசுந்தரி சந்நிதிகளில் வந்தனை வழி பாடுகள் செய்தார்கள். உடல் தளர்ச்சியைப் போக்குமாறு மலையுச்சியில் குளிர்ந்த தென் றல் அருமையாக வீசியது. கோயிலதிகாரி கள் நமது குழுவினரை அகமும், முகமும் மலர வரவேற்றுத் தெய்வ தரிசனம், பட்சி தரிசனம் செய்து வைத்தார்கள். சகல நோய்களையும் நீக்கவல்லதான திருக்குளம், உச்சிப்பொழு தில் நாள்தோறும் வந்து அன்னப் பிரசாதம் உண்டு செல்லும் இரண்டு கழுகு பட்சிகள், பன்னிரண்டு வருடத்திற்கு ஒருமுறை திருக் குளத்தில் கிடைக்கப்பெறும் ஓங்கார ஓசை யெழுப்பும் திருச்சங்கு, இந்திரன் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை இடி இடித்துச் செய் யும் விசேட பூஜை ஆகியன இத்திருத்தலத் தின் விசேடங்களாகும் என்று அவர்கள் எடுத் துரைத்தார்கள். பாடல் பெற்ற இத்தலம் மிகப் பழமை வாய்ந்தது. நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மாமல்லபுரம் செல்லும் உல்லாசப்பயணிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளனர்.

மலையில் தரிசனம் செய்த பின்னர் அன்பர் களை அடிவாரக் கோயிலுக்கு அழைத்துச் சென்று ஒவ்வொரு சந்நிதியிலும் மேளவாத் திய முழக்கத்துடன் தரிசனம் செய்து வைத் தார்கள். கோயில் மண்டபத்தில் ஊர்ப்பெரி யோர்களின் வரவேற்புரைக்குப் பின்னர் அருளுரை நிகழ்த்தப்பட்டது. ஆன்மீகசக் தியை வளர்க்கும் விதமும், கோயில் வழி பாட்டு முறைகளும் ஆங்கு எடுத்தியம்பப் பெற்றன. பின்னர் வள்ளலார் திருமண மண்டபம் திரும்பி வந்து அறுசுவை உணவு கொண்டு சற்று ஓய்வு மேற்கொண்டார்கள். மண்டபம் சகல வசதிகளுடன் மிகவும் நவீன மாகக் கட்டப்பட்டுள்ளது.

அன்று மாலை 4-30 மணிக்குப் பாதயாத் திரை துவங்கியது. அன்பர்கள் வழியெங்கும்

"சிவாய நம ஓம் சிவாய நம:
சிவாய நம ஓம் நமசிவாய"

என்ற திருமந்திரத்தை இடைவிடாது ஒலித் துக்கொண்டே சென்றார்கள். இடையில் நெமிலி (நென்மேலி) யில் குளிர்ப்பானமும், வல்லம் கிராமம் நேரு நகரில் சுக்குமல்லிக் காப்பியும் கொடுத்து இரண்டு அன்பர்கள் உபசாரம் செய்தனர். 18கி.மீ. தூரம் கடந்து செங்கற்பட் டில் அருளகம் என்ற திருமண மண்டபத்தை அடைந்தபோது மணி இரவு 8-30 ஆகியிருந் தது. வழியில் கடந்து சென்ற கிராமங்களில் எளிய மக்கள் கும்பல் கும்பலாகக்கூடி நின்று ஆர்வத்துடன் கவனித்தார்கள். இறைவனின் திருநாமங்களை அவர்கள் செவியாரப் பருகினர் கள். இது இருட்டறையைத் திறந்து விளக்கு ஏற்றிவைத்தது போல் இருந்தது. நாய்கள் கூட்டங் கூட்டமாக ஆங்காங்கே பெருங்குர லெடுத்துக் குலைத்தன. அன்பர்கள் கருமமே கண்ணாக மேற்சென்றார்கள். வழியில் இரண்டு சிறுவர்கள் பிறருடைய தூண்டுதல் எதுவு மின்றித் தாமே முன் வந்து பாதயாத்திரைக் குழுவினரின் முன்னால் நடுவீதியில் வீழ்ந்து வணக்கம் செலுத்தினார்கள். இவ்விதம் ஒவ் வொரு ஊரிலும் பல ஏழை மக்கள் மனமுவந்து குழுவினரை நமஸ்கரித்தார்கள். அவர்கள் உள் ளங்களில் ஆன்மீகம் என்னும் தரு நாளடை வில் தழைத்தோங்குவது திண்ணம். அன்று இரவு உணவுகொண்டபின் 9-30 மணிக்கு அன் பர்கள் உறங்கச் சென்றார்கள்.

இரண்டாம் நாள்:

வைகறை நான்கு மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து நீறு தரித்து, தியானம், திருப்பள்ளி யெழுச்சி, ஸ்ரீரமணரின் அருணாசல கீர்த்தனை ஆகியன முடித்துக் காலை உணவு செய்த பின் னர் செங்கற்பட்டில் கோயில் தரிசனம் செய் யும் பொருட்டுக் காலை 8-00 மணிக்கு நாமா வளி சொல்லிக்கொண்டு அன்பர்கள் கிளம்பி னார்கள். அருள்மிகு சக்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ காமாட்சி சமேத ஏகாம்பரேஸ்வரர் ஆல யம், ஸ்ரீகோதண்ட ராம சுவாமி ஆலயம் ஆகிய வற்றில் வழிபாடும், தரிசனமும் நன்கு நிறை வேறின. காமாட்சியம்மன் கோவிலில் அனை வருக்கும் மோர் விநியோகம் ஆயிற்று. எல் லாக் கோயில்களிலும் அறநூல்களில் கூறி யுள்ள அருளாளர்களின் கருத்துக்களை வாசித் தும், நாமாவளி சொல்லியும், தனிப்பாடல்கள் பாடியும், அர்ச்சனை மந்திரங்களை அனைவரும் சேர்ந்து சொல்லியும், வரிசைக்கிரமத்தில்

நின்று அமைதியாகப் பிரசாதங்கள் பெற்றுக் கொண்டும், ஓரிடத்தில் ஒருங்கமர்ந்து தியானம் செய்தும் அன்பர்கள் முறையாக வழிபாடு செய்தார்கள். கூப்பாடு போடுதல், நெருக்கித் தள்ளுதல், சச்சரவு செய்தல், உலக விஷயங்களைப் பேசுதல், பிறருக்கு இடைஞ்சல் செய்தல் போன்ற தவறுகள் நிகழாதவண்ணம் பார்த்துக்கொண்டார்கள். கோதண்டராமர் சந்நதியில் அருள்சக்தி பொலிந்திருந்தது. அங்கு உள்ளத்தில் சாந்தம் குடிகொள்வது எளிதாயிற்று. அவ்வாலயத்தில் இருந்த தீர்த்தக் கிணற்றில் உள்ள தீர்த்தம் தரைப்பகுதி தெற்றெனத் தெரியும் அளவுக்குத் தெளிவாக இருந்தது. அது தெளிந்த உள்ளத்தில் ஆத்ம சொரூபம் தெளிவாக விளங்கும் என்பதை எடுத்துக் காட்டியது.

பகல் பன்னிரண்டு மணிக்கு அன்பர்கள் செங்கை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்கு விஜயம் செய்தார்கள். செயலர் ஸ்ரீமத் விருபாட்சானந்த சுவாமியும், ஷண்முகானந்த சுவாமியும் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்கள். அங்கு மூவர் திருமுன்னர் அமர்ந்து சிறிது நேரம் பிரார்த்தனை கீதங்களைப் பாடினார்கள். செயலர் சுவாமி "பாத யாத்திரை என்பது மிகவும் சிறந்த ஆன்மீகக் கைங்கர்யமாகும். முகம்மதியர் பத்தாம் நூற்றாண்டிலும், கிறித்தவர் பதினெட்டாம் நூற்றாண்டிலும் நம்நாட்டைக் கைப்பற்றியபோது வலுக்கட்டாயமான மதமாற்றங்கள் நிகழ்ந்தன. நம்மில் ஒற்றுமை இன்மையே நம் அழிவுக்குக் காரணமாயிற்று. இப்பொழுது சுதந்திர இந்தியாவில் இவர்கள் ஆசைகாட்டி ஹரிஜனங்களையும், மற்ற இந்துக்களையும் வசப்படுத்த முயல்கின்றார்கள். நாம் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இது போன்ற பாத யாத்திரைகளில் உற்சவர் மக்களைத்தேடி திருவீதிவலத்திற்கு எழுந்தருளுதல் போல, நீங்களும் மக்களைத் தேடிச் சென்று நன்மைகள் செய்கிறீர்கள். உங்கள் தொண்டு பல்கிப்பெருகவேண்டும்" என்று கூறினார்கள். திருமடத்தின் சுற்றுச்சூழல் ஆன்மீகப் பணிகளுக்கு ஏற்றவாறு பொருத்தமாக அமைந்துள்ளது. பொதுமக்களின் நன்மைக்காக இங்குப் பல புதிய திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறார்கள். அன்பர்கள் இங்குப் பழரசம் அருந்தி, கற்கண்டுப் பிரசாதம் பெற்றுக்கொண்டு அருளகம் திரும்பினார்கள்.

உணவுகொண்டு ஓய்வுபெற்ற பின்னர் மாலை 4-30 மணிக்குப் பாத யாத்திரையை மீண்டும் தொடர்ந்து ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள ஆத்தூரை அன்பர்கள் ஆறு மணியளவில் அடைந்தனர். அங்கு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் ஊர்ச்சிறுவர், சிறுமியர் யாவரையும் ஒன்று கூட்டி அவர்களுக்கு நாமாவளிகள் கற்றுக்கொடுத்துப் புதிய ஆடைகள், திராட்சைப்பழம், பாரிஸ் மிட்டாய் முதலியவற்றை அன்பர்கள் அளித்தார்கள். மொத்தம் இருநூறு பேர் இதனால் பயன் பெற்றனர். வசதியற்றவர்களுக்கு உடை வழங்கல் என்ற பாத யாத்திரைக் குறிக்கோள் இவ்விதம் ஆத்தூரிலும், பின்னர் பழைய சீவரத்திலும் நிறைவேற்றப்பட்டது. இரவு 7-30 மணிக்கு ஆத்தூர் பிருந்தாவன் பப்ளிக் ஸ்கூல் சென்று அடைந்த பின்னர் உணவும், முக்கால் மணிநேரம் சத்சம்பாஷணையும் முடித்துக்கொண்டு அன்பர்கள் உறங்கச் சென்றனர்.

மூன்றாம் நாள்

7-5-85 செவ்வாய் அன்று காலை 3-30 மணிக்குத் துயில் எழுந்து பல் துலக்கி மால்ட் அருந்திய பின்னர் பழைய சீவரம் நோக்கிப் பாத யாத்திரை தொடர்ந்தது. ஐந்து கி. மீ. கடந்த பின்னர் பாலூரில் அன்பர் ஒருவர் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து ஒவ்வொருவருக்கும் நான்கைந்து குவளை குளிர்ந்த மோர் தந்து உபசரித்தார். பின்னர் இடைவிடாமல் நடந்து சென்று பழைய சீவரம் லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயில் சென்றடைந்த போது மணி 8-00. அங்கே காலை உணவு முடித்துக்கொண்டு ஆற்றைக்கடந்து அக்கரை சென்று திருமுக்கூடல் ஸ்ரீ அப்பன் வெங்கடேசப் பெருமாள் கோயிலை அடைந்தார்கள். வேகவதி, பாலாறு, செய்யாறு ஆகிய ஆறுகள் சங்கமமாகும் திருமுக்கூடலில் பெருமாள் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சுற்றுமதிலில் சோழர்காலக் கல்வெட்டுக்கள் நிறைந்து காணப்படுகின்றன. பல்லவர் காலத்துக் கர்ப்பக்கிருஹமும், சோழர்

காலத்து மகாமண்டபமும் அமையப்பெற்றது இக்கோயில். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இவ்வூரில் சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகமும், சித்த மருத்துவக்கழகமும், அறக் கூழ்ச்சாலை யும் நிபந்தங்கள் ஏற்படுத்திச் சோழ அரசர்கள் ஆதரித்ததாகத் தொல் பொருள் இலாகாவினர் தெரிவித்தனர். நெடிய திருமால் மும்மூர்த்தி களின் வடிவமாக "எந்தைக்கு இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து" என்றவாறு தாழ்சடை யும், நீண்முடியும்கொண்டு சேவை சாதிக்கின் றார். இக்கோயிலில் கரிய மாணிக்கப்பெரு மாள், ஆண்டாள் ஆகிய சந்நிதிகளும் உண்டு. தரிசனம் ஆனபின்னர் உள்ளூர் பஜனை கோஷ்டியினர் பக்க வாத்தியங்கள் சகிதம் அன்பர்கள் உள்ளம் உருகுமாறு பஜனை கள் பாடியும், நடனம் ஆடியும் முன்னே செல்ல யாவரும் லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருக் கோயில் சென்றடைந்தனர். எம்பெருமான் கம்பீரத்திருவுரு திவ்யமாய்ச் சேவை சாதித்தா யிற்று. பின்னர் ஐம்பது புடவைகள், ஐம்பது வேஷ்டிகள், ஐம்பது துண்டுகள் ஆகியன வசதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டன. இரு நூறு பேர்களுக்குச் சமாராதனையும் செய்விக் கப்பட்டது. முருகப்பெருமானின் திருவுருவப் படங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

உணவும், ஓய்வும் முடித்த பின்னர் 4-30 மணிக்கு வாலாஜாபாத் நோக்கிப் பாதயாத் திரை தொடர்ந்தது. பஜனை கோஷ்டியினர் ஊர் எல்லைவரை உடன் வந்து பஜனைகள் செய்து பிரியாவிடை தந்தனர். பஜனை கோஷ்டியினருக்குத் துண்டு, பஜனைப் பாடல் கள் புத்தகம், திருமுருகன் படம் ஆகியன சன்மானமாக வழங்கப்பட்டன. கோவிந்த பஜனை அவர்கள் மிகவும் உருக்கமாகச் செய் தார்கள். அவர்கள் பஜனையில் கொண்டிருந்த ஆர்வத்தையும், பக்தியையும் பாராட்டும் முறையில் அவர்கள் விருப்பம் ஒன்றைப் பாத யாத்திரை அன்பர்கள் நிறைவேற்றி வைத்த னர். பக்தன் தனக்காக ஒன்றும் வேண்டுவ தில்லை. அவர்களும் தங்களுக்காக ஒன்றும் வேண்டவில்லை. உற்சவ மூர்த்தி பவனி வரும்பொழுது பிடிக்கும் பெரிய வெண்குடை கள் இரண்டைப் பாதயாத்திரை ஞாபகார்த்த மாகப் பழுது பார்த்துத்தர வேண்டுமென்று விரும்பினார்கள். பாதயாத்திரை அன்பர்கள் ரூபாய் எழுநூறு செலவு செய்து குடைகளுக் குப் புதிய துணிகள் வாங்கிக்கொடுத்து குடை களைப் பழுது பார்த்துத் தந்து அவர்கள் விருப் பத்தை நிறைவேற்றினார்கள். செல்லும் ஊர் களில் எல்லாம் பாதயாத்திரைக் குழுவினரின் சார்பில் பொது மக்களுக்குத் தபோவனப் பிர சுரமாகிய 'சிவபுராணம்' இலவசமாக வழங் கப்பட்டது.

அன்பர்கள் மாலை ஆறு மணிக்கு வாலாஜா பாத் அடைந்தனர். அங்கே நான்கு இடங் களில் மேளவாத்திய சகிதம் வரவேற்பு நிகழ்ந்தது. ராஜவீதி கற்பக விநாயகர் கோவில், திரு. பரமசிவம் பிள்ளை சகோதரர் களின் அரிசி ஆலை, ராஜவீதி சுயம்பு ஆதி பராசக்தி வாரவழிபாட்டு மன்றம், வா. தி. மாசிலாமணி முதலியார் மாணவர் இல்லம் ஆகிய இடங்களில் பூரண கும்பத்துடன் கூடிய வரவேற்பு, பூஜைகள், பிரசாத விநியோ கம் ஆகியன நிகழ்ந்தன. அரிசி ஆலையின் பரந்த முற்றத்திலும், மாணவர் இல்லத்தி லும் நிகழ்ந்த சொற்பொழிவுகளை ஊர் மக்கள் திரளாகக் கூடியிருந்து உன்னிப்பாகக் கேட்டு உவகையுற்றனர். ஊர்மக்கள் பெருமளவில் கலந்துகொண்டதால் இந்த நிகழ்ச்சிகள் அன்பர்களுக்கும் உவப்பாய் அமைந்தன.

நான்காம் நாள்:

மாசிலாமணி முதலியார் மாணவர் இல்லத் தில் இரவு தங்கி 8-5-85 புதன்கிழமையன்று காலை 3-30 மணிக்கு விழித்தெழுந்து நித்திய கர்மாக்களை முடித்த பின்னர் 5-00 மணிக்கு அன்றைய வழிநடைப் பயணம் ஆரம்பித்தது. நாலாவது கிலோ மீட்டரில் நாயகன் பேட்டை வாசிகள் அன்புடன் வரவேற்றார்கள். அன்பர் களை வரவேற்கும் பொருட்டு வீதிகளில் பாவு போடுவதையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். வீதிகளில் நீர் தெளித்துக் கோலமிட்டிருந்தார் கள். அவ்வூரில் செல்வ விநாயகர் கோயிலில் ஆற்றிய அருளுரையில் குழந்தைகளை வளர்க் கும் முறைகள் பற்றியும், அவ்வூர் மக்களே உடலுழைப்பு நல்கி கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள கல்யாண மண்டபத்துக் கட்டட வேலையைப் பூர்த்திசெய்வது சிறப்புடைய தாகும் என்ற குறிப்பும் கூறப்பட்டன. பின்னர்

நீர் மோர் அருந்தி வாலீசுவரன் கோயிலில் பூஜை முடித்துக்கொண்டு அய்யம்பேட்டை நோக்கிப் பாதயாத்திரை தொடர்ந்தது.

காலை 7-30 மணிக்கு அய்யம் பேட்டை அடைந்தபோது தாரைகள் முழங்கி மேளதாளத்துடன் அவ்வூரின் பெரும்பாலான வீதிகளுக்குப் பாதயாத்திரை அன்பர்களை அழைத்துச் சென்று விநாயகர் கோவில், ஸ்ரீ மோகாம்பரி அம்மன் கோவில், கந்தகோட்டம் ஆகிய ஆலயங்களில் தரிசனம் செய்து வைத்தார்கள். அன்னை மோகாம்பா பெயருக்கேற்ப மிகவும் காம்பீர்யத் திருமேனி கொண்டு அருட்காட்சி நல்கினாள். தாய்ப்பசுவை நாடிய கன்றினைப் போலப் பக்தர்கள் அவள் திருவடிகளைப் பணிந்து அவள் தண்ணருளைப் போற்றினர். ஒவ்வொரு தெருவினரும் பெரியோர்களைக் கௌரவிக்கும் தங்கள் ஊர் வழக்கப்படி பெரிய பெரிய குடைகளைப் பிடித்து யாத்திரீகர்களை வழிநடத்தினார்கள். அவ்வூர் முருகன் கோயிலில் ஆற்றிய அருளுரையில் நாமஜபத்தின் மகிமை குறித்தும், அதில் ஈடுபடுவதால் கிடைக்கும் நற்பேறுகள் குறித்தும் விளக்கம் தரப்பட்டன.

அய்யம்பேட்டை அன்பர் வீட்டில் சிற்றுண்டி முடித்த பின்னர் காலை 9-15 மணிக்குப் புறப்பட்டு 10-30 மணிக்கு விஷ்ணு காஞ்சி சென்றடைந்தார்கள். அங்கே உடையவர் பெருமான் தமது காலத்தில் எழுந்தருளியிருந்த திருமாளிகைக்குப் பக்கத்தில் உள்ள உத்ராதி மடத்தில் சற்றே இளைப்பாறிக் குளிர்ப்பானம் பருகிய பின் வரதராஜப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சென்றார்கள். பெருமாளும் தாயாரும் தம்மைச் சரண் என்று வந்த தீனர்கட்குத் துன்பங்கள் துடைத்தருளித் தூய்மையைக் காத்தருளும் வரத மூர்த்திகளாய்த் துலங்குகின்றார்கள். அம்மூர்த்திகளை வழிபட்டபொழுது உள்ளத்தில் பெருமிதம்பொங்குவதாயிற்று. தொழும்பர்க்கு அருளும் அவ்வருளாளன் சந்நிதியை விட்டு வர மனம் வராமல் பக்தர்கள் மெதுவாக நகர்ந்தார்கள்.

எம்பெருமான் சேவை முடிந்தான பின்னர் அத்திவரதர் சந்நிதித் தெருவில் அமைந்திருக்கும் அனந்தபவனம் என்னும் அனந்தாச்சாரியார் சுவாமி ஐதிகத்தைச் சார்ந்த ஸ்ரீ வைணவத்திருமாளிகையில் முக்கனிகளுடன் பலவகையாய் அமுது செய்வித்துப் பக்தர்களைத் தங்கள் பரிவினால் திணறடித்தார்கள். அங்குச் சிறிது நேரம் ஓய்வு கொண்டு மாலை 4-00 மணிக்குச் சிவ காஞ்சி நோக்கி 'ஸ்ரீ நாராயண ஹரிநாராயண என்ற நாமம்' சொல்லிக்கொண்டு பாத யாத்திரையைத் தொடர்ந்த அன்பர்கள் அரைமணி நேரத்தில் பெரிய காஞ்சிபுரம் ஜவுளிக் கடை சத்திரத்தை அடைந்தார்கள். அங்கு உணவும், ஓய்வும் மேற்கொண்டார்கள்.

பாத யாத்திரையின் சிகரமான நிகழ்ச்சியான மூவர்திருவீதி உலா அன்று மாலை சரியாக ஆறு மணிக்குத் தொடங்கியது. காஞ்சிபுரம் அன்பர் ஒருவர் சகல ஏற்பாடுகளையும் அற்புதமாகச் செய்திருந்தார். ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயிலார் அழகிய பெரிய சப்பரம் கொடுத்து உதவினார்கள். அதில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகியோரின் படங்கள் வைத்து அழகிய மலர்களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்காரம் செய்து பூமாலைகளும், தோரணங்களும் அழகுக்கு அழகு செய்ய நான்கு ராஜ வீதிகளிலும் சுற்றி வர நான்கு மணி நேரம் பிடித்தது. பாத யாத்திரை அன்பர்கள் தண்டு விளக்குகளைத் தாங்கியும், சப்பரத்தை இழுத்தும் தொண்டு செய்தனர். முதலில் நாதஸ்வர வாத்திய இசை, பின்னர் நாமாவளி, பிறகு தேவாரப்பண், தொடர்ந்து விவேகானந்தரின் அரிய கருத்துக்களை ஒலி பெருக்கியில் வாசித்தல் என்று இவ்வாறு ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் வரிசைக்கிரமத்தில் நிகழ்ச்சிகள் மாறி மாறி அமைந்தன. இதனால் வழி நடந்த சிரமம் அவ்வளவாகத் தென்படவில்லை. மேலும் ஒன்றுக்கொன்று இடையூறு இல்லாமல் எல்லாவற்றுக்கும் தக்க கவனமும், ஈடுபாடும் செலுத்தப்பட்டன.

இந்தக் கண்கொள்ளாக் காட்சி பரமஹம்சரின் விசுவருபக் காட்சியாக அமைந்தது. காஞ்சிபுரத்தில் இத்தகைய நிகழ்ச்சி இதுவே முதல் முறையாகும் என்று அங்குள்ளவர்கள் கூறினார்கள். காஞ்சிபுரம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரும் தம் அலுவல்களைச் சற்று

நேரம் மறந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். ஊர்வலம் இரவு பத்து மணிக்கு முடிவுற்றபோது அன்பர்கள் என்று மில்லாத மன நிறைவுடனும், ஆழ்ந்த பக்தி உணர்வுடனும் உணவு கொண்டு விட்டு உறங்கச் சென்றார்கள். அன்று காஞ்சி நகர மக்களின் செவிக்கும், கண்ணுக்கும் இவ்வாறு சிறந்த விருந்து படைக்கப்பட்டது. பெரும் பாலோரிடத்தில் அடங்கிக் கிடந்த ஆன்ம உணர்வைத் தட்டி எழுப்புவதற்கு இது தூண்டு கோலாய் அமைந்தது.

ஐந்தாம் நாள் :

பாத யாத்திரையின் இறுதி நாளான 9—5—85 வியாழன் அன்று அன்பர்கள் பொழுது புலரும் முன் துயிலெழுந்து பால் அருந்திவிட்டுத் திருக்கோயில்களைக் காணக் கிளம்பினார்கள். கோவிந்தன் பெயரைச் சொல்லிக்கொண்டு உலகளந்தான் திருக்கோயில் சென்றபோது வாயில் கதவு திறந்திருக்கவில்லை. பின்னர் சக்தி நாமம் சொல்லி அன்னை காமாட்சியின் சந்நிதியை அடைந்தார்கள். ஏகாக்னியில் ஒற்றைக்காலில் நின்று உக்கிர தவம் புரிந்த அன்னை இங்கு அன்பர்களுக்கு அனவரதமும் வேண்டுவது அனைத்தையும் தரும் வரத மூர்த்தியாக விளங்குகின்றாள். காமம், குரோதம் முதலிய ஆறுபகைவர்களை வெல்வதற்கு உற்றதோர் உபாயம் இந்த அன்னையின் திருவடிகளைப் பற்றி நிற்பதுதான் என்று யாவரும் மனமுருகி நின்றார்கள். காசியில் அன்னம் பாலிக்கும் அன்னபூர்ணேச்வரியே இங்கும் அருளாட்சி செய்கின்றாள். ‘உயிர்கள் யாவும் இந்த மகாசக்தியிடம்தான் தோன்றின; இங்கு தான் முடிவில் ஒடுங்கும்’ என்ற ஞானம் வரப்பெற்றால் நாம் பிறவிப்பயன் எய்தியவர்களாவோம்.

பின்னர் அன்பர்கள் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தை அரங்கேற்றிய குமர கோட்டம் என்ற திருத்தலத்தை அடைந்தனர். தண்ணார் திருமுகமும், தனிநெடுவேலும், பொன்னார் புயமதில் வெள்ளிக் கவசமும் துலங்க இருமாதர் புடைசூழ எந்தை கந்த வேள் காண்பவர் உள்ளம் கல்லாயினும் அது கரையும் வண்ணம் திருக்கோலம் கொண்டிருந்தான். சந்நிதிக்கு அருகாமையில் தியான மண்டபம் அமைந்திருப்பது இத்திருக்கோயிலில் ஒரு விசேடமாகும். அகங்குளிர அன்பர்கள் இங்கு அமைதியாக அமர்ந்து தியானம் செய்தார்கள்.

பின்னர் பிறவிப் பிணியறுக்கும் ‘சிவாயநம’ என்ற பஞ்சாட்சரமந்திரத்தை ஜபித்தவாறு அன்பர்கள் கச்சியேகம்பன் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். நான்கு திசைகளில் நான்கு வகை சுவையுடைய கனிகள் பழுக்கும் தல விருட்சமான மாமரம் இங்குக் காலங் காலமாக இருந்து வருகிறது. தருக்களும் தெய்வத்தின் திருவடிவங்களே என்ற இந்து மதத்தத்துவத்துக்கு நிரூபணமாக இன்றும் இந்த மரத்தை வலம் வந்து பிள்ளைப் பேற்றினை அடையப் பெற்றால் அக்குழந்தையின் தோளில் மாவடு சின்னம் அடையாளமாக இருக்கும் என்று அங்குக் கூறக் கேட்டோம். சிவ சந்நிதியில் அப்பொழுது இருந்த சிவாச்சாரியார் சிவம் பெருக்கும் சீலராகத் துலங்கினார். பண்பும், பணிவும் அமையப்பெற்றவராய்ப் பக்தர்களுக்கு இன்முகம் காட்டிக் கனியமுது அனைய சொற்களால் தல வரலாற்று மகிமையை விளக்கிக் கூறினார். ஏகம்பனை நோக்கிக் கடுந்தவம் புரிந்த அன்னை பிருதுவி ரூபமாக மண்ணால் ஆன சிவலிங்கத்திற்கு வந்தனை வழிபாடுகள் செய்கையில் வேகவதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. சிவத்திற்கு ஆவது தனக்கும் ஆகட்டும் என்று அன்னை தெய்வத்திருவுருவை ஆர அணைத்ததும் நதி அந்தர்முகமாக ஓடலாயிற்று. எம்பெருமான் காட்சி தந்து ஆட்கொண்டான். தேவி காமாட்சியின் திருக்கோயில் முக்தித் தலங்கள் ஏழினுள் ஒன்றாகும். ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் சிவாச்சாரியார் அஷ்டோத்ர நாமங்களை உரத்த குரலில் நிதானமாகவும், தெளிவாகவும் சொல்லிப் பாதயாத்திரை அன்பர்களைப் பக்தியில் லயிக்கச் செய்தார். திருக்கோயில் முன் மண்டபத்தில் அன்பர்கள் காலை ஆகாரத்தை முடித்த பின்னர் பாத யாத்திரை நிறைவு விழாவும், அந்தர் யோகமும் ஒருங்கே நிகழ்த்தப்பெற்றன.

நிறைவு நாள் நிகழ்ச்சியில் முதலில் நிகழ்ந்த உரையில் அந்தர்யோகம் என்பதன் பொருள், அது செயல்படும் முறை, அதனால் பெறப்படும் நன்மைகள், அதில் நான்கு யோகங்களைக்

குறித்துத் தரப்படும் விளக்கங்கள் ஆகியன வற்றைக் குறித்து அருளுரை நிகழ்த்தப்பெற் றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட் தொண்டை மண்டல ஆதீனகர்த்தர் உரை யாற்றுகையில் "அன்பு, பண்பு, வைராக்கியம், ஞானம் ஆகிய குணங்கள் மக்களிடையே இந் நாளில் அருகி வருகின்றன. அந்நாளில் அப் பர் பெருமானைக்காண ஆளுடைய பிள்ளையா ரான ஞானசம்பந்தர் விழைந்தபோது இவரை நாடியே அவரும் வர, இரண்டு திருக்கூட்டங் களும் சங்கமித்த காட்சியினைச் சேக்கிழார் பெருமான் உணர்ச்சி பொங்க விவரிக்கின்றார். இதுபோல் இந்நாளில் தூய உள்ளம் படைத்த அருட்தொண்டர்கள் மக்களை நாடிச் சென்று அவர்களிடையே சமய உணர்வினைத் தூண்டு தல் மிகவும் ஏற்புடைய செயலாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர் பாத யாத்திரையில் கலந்துகொண் டவர்களுக்கு அன்பர் ஒருவர் பெரிய வெள் ளைத்துண்டும், மற்றொரு அன்பர் விவேகானந்த ரைப்பற்றிய சிறிய நூலொன்றையும் அளித் தார்கள். பின்னர் நடைவழிப்பயணத்தில் கலந்துகொண்ட அன்பர்கள் தங்கள் அனுப வங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டார்கள். காலந்தவறாமை, நாள் முழு வதும் சத்விஷயங்களிலேயே கவனம் செலுத் துதல், வைகறையில் துயிலெழல், திடசித்தத் துடன் கொளுத்தும் வெயிலில் நெடுந்தொலை நடத்தல், தியாக உள்ளத்துடன் தம்மிடம் இருப்பதை இரவலர்க்கீந்து அவர்கள் மகிழக் கண்டு தாம் மகிழ்தல், ஐக்கிய உணர்வுடன் முன்பின் அறியாத அன்பர்கள் ஒருவரோடு ஒருவர் இணங்கிப் பழகுதல், எங்கும் எதிலும் இறைவனைக் காணப்பழகுதல் போன்ற பண்பு களிலும், கோயில் வழிபாட்டில் நெருக்கியடித் தல், கூப்பாடுபோடுதல், சச்சரவிடுதல், உலக விஷயங்களைப் பேசுதல், சந்நிதியை மறைத் துக்கொண்டு நெடுநேரம் நிற்றல், பிரசாதங் களுக்காகப் போராடுதல் போன்ற குற்றங் களைச் செய்யாமல் வரிசைக் கிரமத்தில்சென்று ஒருவருக்கும் இடைஞ்சல் இல்லாத முறையில் இறைவணக்கம் செய்கின்ற வழிமுறைகளிலும் தாம் பெற்ற பயிற்சிகளைப்பற்றி அன்பர்கள் உணர்ச்சி பொங்க விவரித்தார்கள்.

ஆங்காங்கே பொதுமக்களுக்கு விபூதிப்பிர சாதம் வழங்கலாம் என்ற கருத்துத் தெரிவிக் கப்பட்டது. நம் நோக்கம் அதுவன்று; அதனால் வீண்கால தாமதமேற்படும்; பாத யாத்திரை யின் நோக்கம் அவ்வளவு எளிதானது அன்று. தவம், யக்ஞம், விரதமும் போன்ற உயர்ந்த லட்சியங்களைப் பாத யாத்திரீகர்கள் நிறை வேற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று விவரிக்கப்பட்டது. தன்னை ஒவ்வொரு கணமும் திருத்தி அமைத்தல் தவம் எனப்படும். மனம் மொழி மெய்களால் பிறருக்குத் தொண்டுகள் செய்து தன் செயல்கள் அனைத்தையும் தெய் வப்பணி ஆக்குதல் யக்ஞம் எனப்படும். அப்பொழுது வாழ்க்கையே திருப்பணி மய மாய் ஆகிவிடுகின்றது. இத்தகைய உயர்ந்த லட்சியத்தை அடைந்தே தீருவேன் என்று மன உறுதியோடு செயல்படுதல் விரதம் ஆகும்.

பாத யாத்திரை அன்பர்கள் தாம் வாழ்க்கை யில் செய்கின்ற செயல்களைப் பிழைப்புக்காக அன்றி மக்கள்நலனுக்காகத் தெய்வத்தொண் டாகச் செய்யும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இது அவர்கள் செய்யும் தொழிலைத் திருப்பணி ஆக்குவதாகும். ஒவ்வொருவரும் இத்தகைய திருப்பணி செய்வதற்குச் சங்கல் பித்துக்கொண்டு அதை வாழ்க்கையில் நல்ல முறையில் செயல்படுத்தித் தங்கள் வாழ்வைத் திருத்தியமைப்பதே இப்பாத யாத்திரையின் பயனாகும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. எல்லாம் வல்ல இறைவன் திருவரு ளால் தவம், யக்ஞம், விரதம் போன்ற உயர்ந்த லட்சியங்களில் அன்பர்கள் முன்னேற்றம் காணவேண்டுமென்று பரம்பொருளை வாழ்த்தி மங்கள கீதத்துடன் முழங்கி இந்த வருட யாத்திரை வைபவங்களைப் பூர்ததி பண்ணி னார்கள்.

செய்திகள்

நிகழ்பவை:

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ர மத்தில் பருவ அந்தர்யோகம் ஜூன் 15 ஆம் தேதி துவங்கியுள்ளது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம் ரு.	26-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,, ...	21-00
மஹாபாரதம் ,, ...	8-00
இராமாயணம் ,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ...	6-50
தினசரி தியானம் ,, ...	5-00
ஞானயோக விளக்கம் ...	15-00
ராஜயோக விளக்கம் ...	12-00
கர்மயோக விளக்கம் ...	10-00
பக்தியோக விளக்கம் ...	9-00
விவேகானந்த விவரணம் ...	7-50
விவேகானந்த உபநிஷதம் ...	7-00
கடவுளின் வடிவங்கள் ...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ...	5-50
மாணவருக்கு ஒரு சொல் ...	4-50
சகோதரி நிவேதிதை ...	3-75
சுவாமி விவேகானந்தர் ...	3-50
பஜனைப்பாடல்கள் ...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ...	3-00
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	3-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் டி ...	3-00
சின்மயானந்த குரு டி ...	3-00
ஆனந்தமானபரம் டி ...	3-00
சுகவாரி டி ...	3-00
மௌனகுரு வணக்கம் டி ...	3-00
எங்கும் நிறைகின்றபொருள் டி ...	2-50
மலைவளர் காதலி டி ...	1-50
பரசிவ வணக்கம் டி ...	1-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
அறம் வளர்த்த நம்பி ...	2-50
சந்நியாசி ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	2-50
ஹரிச்சந்திரன் டி ...	2-00
தவப்புதல்வர்கள் டி ...	2-00
வாலி மோட்சம் டி ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் டி ...	1-75
நன்மக்களைப் பெறுதல்	1-75
விபீஷணன் சரணாகதி (நாடகம்) ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
காயத்ரீ ...	1-50
மாணாக்கன் ...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	1-25
சைவன் யார்? ...	1-25

*ஆலய வழிபாடு ...	1-25
*ஆத்ம சக்தி ...	1-25
*மனிதனது நிஜசொரூபம் ...	1-25
*சிவதத்துவம் ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ...	1-00
தபோபலன் (நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ,, ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ...	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
*கணபதி ...	1-00
*சக்தி தத்துவம் ...	0-90
*சூரியநாராயணன் ...	0-75
தெய்வீக மகிமைகள் ...	0-75
*முருகக்கடவுள் ...	0-75
வர்ணாச்ரம தர்மம் ...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
*விஷ்ணு தத்துவம் ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...	10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை ...	0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-30
The Bhagavad Gita (12th Imp.) ...	30-00
Sri Lalithambika Sahasranama Stotram	15-00
The Indian National Education ...	10-00
Tirukkural (with plastic cover) ...	9-00
Ramakrishna lives Vedanta ...	8-00
Mahaveer Sri Hanuman ...	7-75
Man Making Message ...	7-00
Siva Sahasranama Stotram ...	7-00
Ramayana (with plastic cover) ...	7-00
Mahabharata ,, ...	6-00
The Bhagavad Gita (Small Size) ...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,, ...	6-00
Daily Divine Digest (DELUXE) ...	6-00
Daily Divine Digest (Ordinary) ...	4-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
Thus Speaks Tayumana Swamigal ...	3-50
*Introducing The Gita ...	2-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
The Nursery School ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
*Key to Higher Life ...	1-25

* இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

DHARMA CHAKRAM June-'85 Regd. No. M. 6022

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

விளக்கியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

தர்ம சக்கரத்தில் 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்' என்ற தலைப்பில் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கட்டுரைகள் யாண்டும் பயன்படக் கூடியதாக இருப்பதால், அவைகளைத் தொகுத்து 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்' என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம். அம்பிகையின் நாமங்களை பொருள் உணர்ந்து உச்சரிப்பதற்கு இந்நூல் சாதகர்களுக்குப் பயன்படும்.



எல்லாரும் எளிதில் பொருள் உணர்ந்திடும் எளிய இனிய தமிழ் நடை. அழகிய காலிகோ பைண்டு அமைப்பில் டெம்மி 1க்கு 8ல் 576 பக்கங்களை உடையது. ரூ. 40-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தின் பொருட்டு மிகக் குறைந்த

விலை ரூ. 26க்கு விற்கப்படுகிறது.

(தபால் செலவு: ரூ. 4-00)

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை 639 115 :: திருச்சி ஜில்லா.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.